
பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

108

செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686742-6-4





மாணிக்கவாசகர்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

மாணிக்கவாசகர்







மாணிக்கவாசகர்



மாணிக்கவாசகர்

பிறப்பு	திருவாதவூர்
இயற்பெயர்	திருவாதவூரடிகள்
தலைப்புகள்/விருதுகள்	தென்னவன் பிரமராயன், நாயன்மார், மூவர்
தத்துவம்	சைவ சமயம் பக்தி நெறி
மேற்கோள்	நமச்சிவாய வாழ்க, நற்றுணையாவது நமச்சிவாயவே

சிவபெருமானின் பெருமைகள்

மாணிக்கவாசகர் இயற்றிய சிவபுராணம், சிவபெருமானின் பெருமைகளைக் கூறுவது.

ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்த மாணிக்கவாசகரால் இயற்றப்பட்ட திருவாசகம் என்னும் சைவத் தமிழ் நூலின் ஒரு பகுதியே சிவபுராணம்.

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்று போற்றப்படுகிறது. சிறப்புப் பெற்ற இந்நூலின் முதற் பகுதியாகச் சிவபுராணம் அமைந்துள்ளது.

95 அடிகளைக் கொண்டு இன்னிசைக் கலிவெண்பாப் பாடல் வடிவில் அமைந்துள்ள இது சைவர்களின் முதன்மைக் கடவுளான சிவபெருமானின் தோற்றத்தையும், இயல்புகளையும் விவரித்துப் போற்றுகிறது.

அத்துடன், உயிர்கள் இறைவனை அடைவதற்கான வழிமுறைகளையும் சைவசித்தாந்தத் தத்துவ நோக்கில் எடுத்துக்கூறுகின்றது.

மிகவும் எளிய தமிழில் எழுதப்பட்டிருக்கும் இப்பாடலின் பெரும்பாலான பகுதிகள், ஆயிரத்து நூறு ஆண்டுகள் கழிந்துவிட்டபின், தற்காலத்திலும் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியவையாக உள்ளன.

சிவபுராணத்தின் நோக்கம்

முன் செய்த பாவ புண்ணியங்கள் அனைத்தும் தீர்வதற்காக உள்ளம் மகிழும் வகையில் சிவபுராணத்தைக் கூறுகிறேன் என்னும் பொருள்பட, சிவபுராணம் பாடியதன் காரணத்தை அதன் 19 ஆம், 20 ஆம் அடிகளில் விளக்கியுள்ளார் மாணிக்கவாசகர்.

சைவசித்தாந்தக் கொள்கைகளின்படி, உயிர்கள் செய்யும் நன்மை, தீமை ஆகிய இரு வினைகளும் அவை மீண்டும் மீண்டும் பிறப்பதற்குக் காரணமாக அமைவதுடன், உயிர்கள் இறைவனை அடைவதற்கும் தடையாக அமைகின்றன.

இதனாலேயே, முந்தை வினைகள் அனைத்தும் ஓய இறைவன் அருள் தேவை என்பதை எடுத்துக் கூறுகிறது சிவபுராணம்.

இதன் இறுதி அடிகளும், அல்லல் நிறைந்த பிறவியை நீக்கும் வல்லமை பெற்ற திருவடிகளைப் பணிந்து சொல்லப்பட்ட இப்பாடலைப் பொருள் உணர்ந்து சொல்லுபவர்கள் சிவபெருமானின் திருவடிகளை அடைவார்கள் என்று வலியுறுத்துகின்றன.

சைவசித்தாந்தக் கருத்துகள்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சைவ சமயம் தமிழ் நாட்டில் சைவசித்தாந்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

இறைவன், உயிர், அதனைப் பீடிக்கும் மலங்கள் ஆகிய மூன்றும் என்றும் நிலைத்திருக்கும் உண்மைகள் என்று கூறும் சைவ சித்தாந்தம், அவற்றின் இயல்புகள், அவற்றிடையேயான தொடர்புகள் என்பன பற்றிக் கூறி, உயிர்களின் விடுதலையும் இறுதி நோக்கமுமாகிய, இறைவனை அடையும் வழிமுறைகள் பற்றியும் கூறுகிறது.

இறைவனுடைய இயல்புகள், உயிரின் தன்மை, அவற்றை மலங்கள் பீடித்திருத்தல், உயிர்கள் திரும்பத் திரும்பப் பிறக்கவேண்டியிருத்தல், உயிர்களின் விடுதலை, உயிர்களை விடுவிப்பதில் இறைவனின் பங்கு, இறைவன் அருளைப் பெறுவதில் உயிர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்பன தொடர்பாகச் சிவபுராணத்தில் குறிப்புகள் வருகின்றன.

இந்து சமயத்தின் ஒரு பிரிவு என்ற வகையில் சைவம் வேதங்களை ஏற்றுக்கொண்டாலும், ஆகமங்கள் எனப்படும் நூல்களே சைவசித்தாந்தத்தின் உயிர் நாடியாக விளங்குபவை.

சிவபுராணம் தொடக்கத்திலேயே இறைவனைப் போற்றும்போது, தானே ஆகமம் ஆகி நின்று உயிர்களுக்கு அருகில் வருபவன் என்ற பொருள்பட ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் என்று கூறுகிறது.

இதன் மூலம், உயிர்களின் விடுதலைக்கு ஆகமங்களின் இன்றியமையாமை வற்புறுத்தப்படுகிறது.

சிவபுராணம்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%AA%E0%AF%81%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%A3%E0%AE%AE%E0%AF%8D

சிவபுராணம் என்பது பொ.ஊ. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்த மாணிக்கவாசகரால் இயற்றப்பட்ட திருவாசகம் என்னும் சைவத் தமிழ் நூலின் ஒரு பகுதி ஆகும். *திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்* என்று போற்றப்படுகிறது. சிறப்புப் பெற்ற இந் நூலின் முதற் பகுதியாகச் சிவபுராணம் அமைந்துள்ளது. 95 அடிகளைக் கொண்டு இன்னிசைக் கலிவெண்பாப் பாடல் வடிவில் அமைந்துள்ள இது சைவர்களின் முதன்மைக் கடவுளான சிவபெருமானின் தோற்றத்தையும், இயல்புகளையும் விவரித்துப் போற்றுகிறது. அத்துடன், உயிர்கள் இறைவனை அடைவதற்கான வழிமுறைகளையும் சைவசித்தாந்தத் தத்துவ நோக்கில் எடுத்துக்கூறுகின்றது. மிகவும் எளிய தமிழில் எழுதப்பட்டிருக்கும் இப் பாடலின் பெரும்பாலான பகுதிகள், ஆயிரத்து நூறு ஆண்டுகள் கழிந்துவிட்டபின், தற்காலத்திலும் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியவையாக உள்ளன.

சிவபுராணத்தின் நோக்கம்

முன் செய்த பாவ புண்ணியங்கள் அனைத்தும் தீர்வதற்காக உள்ளம் மகிழும் வகையில் சிவபுராணத்தைக் கூறுகிறேன் என்னும் பொருள்பட, சிவபுராணம் பாடியதன் காரணத்தை அதன் 19 ஆம், 20 ஆம் அடிகளில் விளக்கியுள்ளார் மாணிக்கவாசகர். சைவசித்தாந்தக் கொள்கைகளின்படி, உயிர்கள் செய்யும் நன்மை, தீமை ஆகிய இரு வினைகளும் அவை மீண்டும் மீண்டும் பிறப்பதற்குக் காரணமாக அமைவதுடன், உயிர்கள் இறைவனை அடைவதற்கும் தடையாக அமைகின்றன. இதனாலேயே, *முந்தை வினைகள் அனைத்தும் ஓய* இறைவன் அருள் தேவை என்பதை எடுத்துக் கூறுகிறது சிவபுராணம். இதன் இறுதி அடிகளும், *அல்லல் நிறைந்த பிறவியை நீக்கும் வல்லமை பெற்ற திருவடிகளைப் பணிந்து சொல்லப்பட்ட இப்பாடலைப் பொருள் உணர்ந்து சொல்லுபவர்கள் சிவபெருமானின் திருவடிகளை அடைவார்கள் என்று வலியுறுத்துகின்றன.*

சிவபுராணத்தின் அமைப்பு

உயிர், தான் செய்யும் வினைகளின் விளைவுகளினால் மீண்டும் மீண்டும் உலகில் பிறந்து அழுந்துவதில் இருந்து விடுதலை பெற்றுச் சிவனை அடைவதற்காக இறைவனை வேண்டுவதாக அமைந்திருப்பது இப்பாடல்.

- *நமச்சிவாய வாழ்க* என்று தொடங்கி, முதல் பதினாறு அடிகள் வரை, இறைவனை வாழ்த்துவதாக அமைந்துள்ளன.

நம சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

- பதினேழாவது அடியிலிருந்து இருபது வரை நூலின் நோக்கம் பற்றியும், அதை எழுதுவதற்கு ஆக்கியோனுக்கு உள்ள தகுதியும் கூறப்படுகின்றன.
- பின்னர் இறைவனைப் புகழ்ந்து, உயிர் தன்னுடைய குறைகளை இறைவனுக்குத் தெரியப்படுத்தும் அடிகள் வருகின்றன. உயிர், உலகில் பல்வேறு வடிவங்களிற் பிறந்து களைத்துப் போனதைக் கூறுவதாக இருபத்தாறு

முதல் முப்பத்தோராவது வரையான ஆறு அடிகள் அமைந்துள்ளன.

- இறைவன் திருவடிகளைக் கண்டதில் வீடு பேறு அடைந்த மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தும் 32 ஆவது அடியைத் தொடர்ந்து மீண்டும் இறைவனின் புகழ் கூறப்படுகின்றது.
- 50 தொடக்கம் 55 வரையான அடிகள், உயிர், தன்னைச் சுற்றி அமைந்துள்ள மாயையினால் உருவான உடல் பற்றியும், அவ்வுடலின் ஐந்து புலன்களும் தன்னை ஏமாற்றுவதையும் எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளது.
- தொடர்ந்து 83 ஆவது அடிகள் வரை இறைவனின் புகழ் கூறப்பட்டு, 84 ஆம், 85 ஆம் அடிகளில் பல்வேறு வடிவங்களில் இருக்கும் உடம்பினுள் கட்டுப்பட்டிருக்க முடியாமல் இருக்கும் நிலையைக் கூறி உயிர் புலம்புகிறது.
- மீண்டும் இறைவனின் புகழ்ச்சியுடன், இந் நூலைப் பொருள் உணர்ந்து சொல்லுபவர்கள் அடையக்கூடிய பயனை இறுதி நான்கு வரிகளில் கூறி நூல் நிறைவு எய்துகிறது.(சிவபுராணத்தில் மொத்தம் 95 அடிகள் உள்ளன)

சிவபுராணத்தில் சைவசித்தாந்தக் கருத்துகள்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சைவ சமயம் தமிழ் நாட்டில் சைவசித்தாந்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. இறைவன், உயிர், அதனைப் பீடிக்கும் மலங்கள் ஆகிய மூன்றும் என்றும் நிலைத்திருக்கும் உண்மைகள் என்றுகூறும் சைவ சித்தாந்தம், அவற்றின் இயல்புகள், அவற்றிடையேயான தொடர்புகள் என்பன பற்றிக் கூறி, உயிர்களின் விடுதலையும் இறுதி நோக்கமுமாகிய, இறைவனை அடையும் வழிமுறைகள் பற்றியும் கூறுகிறது.

- இறைவனுடைய இயல்புகள், உயிரின் தன்மை, அவற்றை மலங்கள் பீடித்திருத்தல், உயிர்கள் திரும்பத் திரும்பப் பிறக்கவேண்டியிருத்தல், உயிர்களின் விடுதலை, உயிர்களை விடுவிப்பதில் இறைவனின் பங்கு, இறைவன் அருளைப் பெறுவதில் உயிர்கள்

கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்பன தொடர்பாகச் சிவபுராணத்தில் குறிப்புகள் வருகின்றன.

இந்து சமயத்தின் ஒரு பிரிவு என்ற வகையில் சைவம் வேதங்களை ஏற்றுக்கொண்டாலும், ஆகமங்கள் எனப்படும் நூல்களே சைவசித்தாந்தத்தின் உயிர்நாடியாக விளங்குபவை.

- சிவபுராணம் தொடக்கத்திலேயே இறைவனைப் போற்றும்போது, தானே ஆகமம் ஆகி நின்று உயிர்களுக்கு அருகில் வருபவன் என்ற பொருள்பட *ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான்* என்று கூறுகிறது. இதன் மூலம், உயிர்களின் விடுதலைக்கு ஆகமங்களின் இன்றியமையாமை வற்புறுத்தப்படுகிறது.

இறைவன்

சைவ சித்தாந்தம் கூறும் மூன்று உண்மைப் பொருள்களுள் இறைவனும் (பதி) ஒன்று. அவன் அறிவு வடிவமானவனும், எங்கும் நிறைந்திருப்பவனும், எல்லாவல்லமையும் உடையவனும் ஆவான் என்பதும்; படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களை அவன் புரிகிறான் என்பதும் சைவ சித்தாந்த மரபு. இந்தக் கருத்துகள் சிவபுராணத்தின் பின் வரும் அடிகளில் எடுத்து ஆளப்படுகின்றன.

- *மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே*
- *ஆக்கம் அளவு இறுதி இல்லாய்*
- *விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,*

எண் இறந்து எல்லை இலாதானே

- *அளவிலாப் பெம்மானே*
- *தோன்றாப் பெருமையனே ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே*
- *போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே*
- *அனைத்து உலகும் ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்*

போக்குவாய்

உயிரும், மலங்களும்

உயிரும் உண்மைப் பொருளே, அதற்கும் அறிவு உண்டு, ஆனாலும் அதனை இயல்பாகவே பீடித்துள்ள ஆணவ மலத்தினால் அதன் அறிவு முற்றாக மறைக்கப்பட்டுள்ளது என்கிறது சைவ சித்தாந்தம். முற்பிறவியின் வினைப் பயன்கள் *கன்மம்* என்னும் மலமாகவும், வினைப் பயன்களை நுகர உதவும், உடல் மற்றும் உலகப் பொருட்கள் வடிவில் *மாயை* என்னும் மலமும் இடையில் வந்து உயிரைப் பீடிக்கின்றன. இக்கருத்துகள் சிவபுராணத்தின் பின்வரும் அடிகளிலே காணக் கிடைக்கின்றன.

- *எஞ்ஞானம் இல்லாதேன்*
- *பொல்லா வினையேன்*
- *வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருளை*
- *மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே*
- *வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப ஆற்றேன்*

பிறவிச் சுழல்

உயிர்கள் ஒவ்வொரு பிறவியிலும் செய்யும் நல்வினை, தீவினைகளின் பயன்களை நுகர்வதற்காக அவை புதிய பிறவிகளை எடுத்துப் பிறவிச் சுழலில் சிக்கிக் கொள்கின்றன. இச் சைவ சித்தாந்தக் கொள்கை சிவபுராணத்தின் அடிகளிலே பொதிந்துள்ளன.

- *புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*
  பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
  கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
  வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
  செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
  எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்

- *வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப ஆற்றேன்.*

இச் சுழலிலிருந்து நீங்கி விடுதலை பெறுவதற்கு இறைவன் திருவருள் தேவைப்படுகிறது. பிறவிச் சுழலிலிருந்து உயிர்களை மீட்க வல்லவன் இறைவனே என்னும் சைவ சித்தாந்தக் கருத்துகள்

சிவபுராணத்தின் பல அடிகளிலே காணப்படுகின்றன.

- *பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்.*
- *மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன்.*
- *பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்.*
- *அல்லல் பிறவி அறுப்பானே*
- *கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே*
- *அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே*
- *பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே*
- *என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்*

தமிழ் இணையக் கல்விக்கழகம்
TAMIL VIRTUAL ACADEMY
https://www.tamilvu.org/ta/library-l4180-html-l4180ind-138065

திருவாசகம்

- சிவபுராணம்
- கீர்த்தித் திருஅகவல்
- திருஅண்டப் பகுதி
- போற்றித் திருஅகவல்
- **திருச் சதகம்**
- நீத்தல் விண்ணப்பம்
- திருஎம்பாவை
- திருஅம்மானை
- திருப்பொன் சுண்ணம்
- திருக்கோத்தும்பி
- திருத்தெள்ளேணம்
- திருச் சாழல்
- திருப்பூவல்லி
- திருஉந்தியார்

- திருத்தோள் நோக்கம்
- திருப்பொன் ஊசல்
- அன்னைப் பத்து
- குயில் பத்து
- திருத்தசாங்கம்
- திருப்பள்ளி எழுச்சி
- கோயில் மூத்த திருப்பதிகம்
- கோயில் திருப்பதிகம்
- செத்திலாப் பத்து
- அடைக்கலப் பத்து
- ஆசைப் பத்து
- அதிசயப் பத்து
- புணர்ச்சிப் பத்து
- வாழாப் பத்து
- அருள் பத்து
- திருக்கழுக்குன்றப் பதிகம்
- கண்ட பத்து
- பிரார்த்தனைப் பத்து
- குழைத்த பத்து
- உயிருண்ணிப் பத்து
- அச்சப் பத்து
- திருப்பாண்டிப் பதிகம்
- பிடித்த பத்து
- திருஏசறவு
- திருப்புலம்பல்
- குலாப் பத்து
- அற்புதப் பத்து
- சென்னிப் பத்து
- திருவார்த்தை
- எண்ணப் பதிகம்
- யாத்திரைப் பத்து
- திருப்படை எழுச்சி
- திருவெண்பா
- பண்டு ஆய நான்மறை
- திருப்படை ஆட்சி
- ஆனந்த மாலை
- அச்சோப் பதிகம்
- **உரை நூல்**

திருவாசகம்

Thiruvasagam |Manickavasagar

https://www.youtube.com/watch?v=bqAgjyDe83Q

[1:02:44]

திருவாசகம்-சிவபுராணம்

https://music.youtube.com/search?q=%23manikkavasagar

[18:56]

Manickavasagar - History and Culture

https://www.youtube.com/watch?v=uwk1mDb9c7w

[1:32:02]

Saint Manickavasagar & Thiruvasagam

https://www.youtube.com/watch?v=f5B_640ciSo

[22:23]

மாணிக்கவாசகர் வரலாறு

https://www.youtube.com/watch?v=6uhQS3cUHKY

[21:46]

Story of Manickavasagar (Part 1)

https://www.youtube.com/watch?v=CtyVJ_OiE9U

மாணிக்கவாசகரும் திருவாசகமும்

https://www.youtube.com/watch?v=JUXAR5WTqeY

[1:17:25]

மாணிக்கவாசகர் ஜீவசமாதி ஆத்மநாத சுவாமி

https://www.youtube.com/watch?v=MYezKgjOMjY

[15:32]

மாணிக்கவாசகர் வரலாறு

https://www.imayavaramban.com/manickavasagar/

மாணிக்கவாசகர்

மணிவாசகர், மணிமொழியார், திருவாதவூரர், ஆளுடைய அடிகள் முதலிய பல பெயர்களால் வழங்கப் படுபவர் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகர் குறிப்பு

நாடு	பாண்டிய நாடு
பிறந்த ஊர்	திருவாதவூர்
இயற்பெயர்	வாதவூரர்
பாடிய திருமுறை	எட்டாம் திருமுறை
பாடிய நூல்கள்	திருவாசகம், திருக்கோவையார்

மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டில், வைகையாறு பாயும் வாதவூரில், அந்தணர் குலத்தில் பிறந்தார். அவரது தாய் தந்தையர் அவருக்கு 'வாதவூரன்' என்று பெயரிட்டு அழைத்தனர்.

வாதவூரர் வேதம் முதலிய எல்லாக் கலைகளையும் கற்றுக் குறைவற்ற அறிவுடன் விளங்கினார். பதினாறு வயதிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய அவரது புகழ் நாடெங்கும் பரவியது. அவரது புகழைக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் அரிமர்த்தன பாண்டியன் தமது மந்திரிகளுக்கெல்லாம் அவரைத் தலைவன் ஆக்கினான். வாதவூரரும், யாவரும் மகிழுமாறு நடு நிலைமை தவறாமல் நீதியை நிலைநாட்டிக் குடிகளைக் காத்து வந்தார். அவரது சேவையைக் கண்டு மனம் நிறைந்த மன்னன் அவருக்குத் 'தென்னவன் பிரமராயன்' என்னும் பட்டத்தைச் சூட்டி மகிழ்னான்.

இவ்வாறு சிலகாலம் கழிந்த பின்னர், ஞானநூல்களைக் கற்றுணார்ந்த பிரமராயரின் மனத்தில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. நிரந்தரமில்லாத இவ்வுலக இன்பம் பொய் என்றும், சிவபெருமானுடைய திருவடி இன்பமே மெய்யென்றும் அவருக்குத் தோன்றியது. அதுமுதல், வாதவூரடிகள் சிவபெருமானுடைய திருவடிகளை அடைவதற்குரிய முயற்சியைத் தீவிரமாகச் செய்துவந்தார். அறிஞர்களுடன் கலந்து வேதாகமங்களின் பொருளை எல்லாம் ஆராய்ச்சி செய்து நன்னெறியை அறிந்துகொள்ள முயன்றார். கடைசியில், கடவுளைக் கல்வி கேள்விகளால் காண முடியாது என்றும் நம்மை ஏற்றுக்கொண்டு கடவுளோடு சேர்ப்பிப்பவன் ஞான குருவே என்றும் சிந்தை தெளிவு பெற்றார். அதனால், அந்த ஞான குருவைத் தேடிப் பல இடங்களுக்குப் பயணித்தார்.

அப்போது ஒருநாள், சோழநாட்டைச் சேர்ந்த கீழ்க்கடற்கரைக்குச் சென்று மேன்மை பொருந்திய குதிரைகளை வாங்கி வரும்படி பிரமராயருக்குக் கட்டளையிட்டான் பாண்டிய மன்னன். வாதவூரரும் அத்தகைய குதிரைகளை வாங்கி வரும் பொருட்டுத் திருப்பெருந்துறை என்னும் பதியைச் சென்றடைந்தார்.

வாரவூரடிகளுடைய அன்பை அறிந்த சிவபெருமான், அவரை ஆட்கொள்ளக் கருணை கூர்ந்து, ஓர் அந்தணர் வடிவத்தோடு அடியவர்கள் பலர் சூழத் திருப்பெருந்துறையில் கோயிலுக்கருகில் ஒரு குருந்த மரத்தடியில் எழுந்தருளியிருந்தான்.

குருந்தடியில் எழுந்தருளியிருந்த சிவகுருவைக் கண்ட மாணிக்கவாசகர் பேருவகை பொங்க அப்பெரியவரின் அருகில் சென்று அடி பணிந்து நின்று ‘என்னையும் ஆட்கொண்டு அருளவேண்டும்’ என்று வேண்டினார். அவரை ஆட்கொள்ளும் பொருட்டே அங்கு எழுந்தருளியிருந்த ஆண்டவனும் அருட்கண்ணால் நோக்கி, அருகே அழைத்து ஞானோபதேசம் செய்தான். இறைவன் தான் உபதேசித்த அருள் மொழியால் வாதவூரரைப் பரிசுத்தப் படுத்திப் பரிபூரண ஞானத்தையும் அருளினான். ஈசனின் அருள்பெற்று உய்ந்த வாதவூரரும், தொழுத கையும் அழுத கண்ணும் உடையவராகப்

பெருமானைப் பலமுறை வலம்வந்துப் பணிந்து, தாம் அணிந்திருந்த ஆபரணங்களையும் விலை உயர்ந்த உடைகளையும் களைந்து, கோவண உடை தரித்தார்.

அப்போது வாதவூரருக்குத் தம்மை அறியாமலேயே இறைவனைப் பாடவேண்டும் என்னும் எண்ணம் எழுந்தது. அவர் உடனே பழுதிலாச் சொற்களால் பரமனைப் பாடினார். அவரது பாட்டைக் கேட்டு மகிழ்ந்த இறைவன் `மாணிக்க வாசகன்' என்னும் திருநாமத்தை அவருக்குத் தந்தான்; அவரைச் சிலநாள் திருப்பெருந்துறையிலேயே தங்கித் திருப்பணி செய்யவும் கட்டளையிட்டு மறைந்தருளினான்.

சிவபெருமான் மறைந்ததைக் கண்ட மாணிக்கவாசகர், தாயைப் பிரிந்த சேய்போல் பெருந்துயரில் ஆழ்ந்தார். அப்போது, அவரோடு வந்திருந்த அரசனின் வேலையாட்கள் அவர் குதிரை வாங்க வந்த பணியை நினைவுபடுத்தினர். அவரும் குதிரைகளை ஒரு மாதத்திற்குள் அனுப்பிவைப்பதாக அரசனிடம் அறிவிக்கச் சொன்னார். அவ்வேலையாட்களும் அவ்வாறே அரசனிடம் அறிவிக்க, அதுகேட்டு மனம் சலித்த பாண்டியன் மாணிக்கவாசகர் சொல்லி அனுப்பிய நாளை எதிர்பார்த்திருந்தான்.

மாணிக்கவாசகர் குதிரை வாங்கக் கொண்டு வந்த பொருளை எல்லாம் திருப்பெருந்துறைக் கோயில் திருப்பணிக்காகச் செலவு செய்து வந்தார். அப்போது வாதவூரர் சொல்லியனுப்பி ஒரு மாதம் கழிந்தும் குதிரைகள் வந்து சேராததைக் கண்டு வெகுண்ட பாண்டியமன்னன் கடுமையான வார்த்தைகளை எழுதி அவருக்கு ஓலை அனுப்பிக் கேட்டான். அந்த ஓலையைக் கண்ட வாதவூரர் இறைவனிடத்தில் முறையிட்டார்.

ஈசன் அன்றிரவு அவர் கனவில் வந்து "நாமே நல்ல குதிரைகளுடன் வருகிறோம். நீ முன்னர்ச் சென்று, ஆவணிமாதம் மூலநாளில் குதிரைகள் வந்துசேரும் என்று கூறுவாயாக" என்று அறிவித்து மறைந்தான். மாணிக்கவாசகரும் அவ்வாறே பாண்டியமன்னனிடம் சென்று கூறினார். பாண்டிய மன்னனும் தான் ஓலை எழுதி அனுப்பியதற்கு மன்னிப்பு கேட்டு அவரை மீண்டும் வரவேற்றான். பின்னர் அம்மன்னன்

பெருந்துறையில் குதிரைகள் இருக்கின்றனவா என்று அறிந்து வரத் தனது தூதுவரை அங்கு அனுப்பினான். தூதுவர்களும் பெருந்துறையில் எங்குத் தேடியும் குதிரைகள் இல்லாததால் திரும்பி வந்து மன்னனுக்கு அதை அறிவித்தார்கள். அதைக் கேட்டுச் சினம் கொண்ட அரசன், மாணிக்கவாசகரைச் சிறையில் அடைத்துச் சித்திரவதைக்கு உட்படுத்தினான். அந்தக் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் மாணிக்கவாசகர் இறைவனிடம் முறையிட்டார். அவர்மீது இரக்கம் கொண்ட இறைவன் அவரைச் சிறையிலிருந்து நீக்கத் திருவுள்ளம் கொண்டான்.

பிரமராயருக்கு முன்னர் அறிவித்த வண்ணம், குதிரைகளைக் கொண்டுவர எண்ணம் கொண்டு, நரிகளையெல்லாம் குதிரைகளாக்கினான் இறைவன். சிவகணங்களையெல்லாம் அக்குதிரைகளை நடத்தும் சேவகர்களாகவும் ஆக்கினான். சிவபெருமான் குதிரை வியாபாரியைப்போல் வேடம் தாங்கி வெள்ளைக் குதிரைமீது எழுந்தருளி மதுரை நகரை நோக்கி விரைந்தான்.

அக்குதிரைக் கூட்டம் வருவதை அறிந்த அரசன், தான் செய்தது குற்றம் என்று உணர்ந்து, வாதவூரரைச் சிறையிலிருந்து விடுவித்து, அரண்மனைக்கு வரும்படி அழைத்தான். குதிரை வர்த்தகனிடமிருந்து பரிகளைப் பெற்றுக்கொண்ட அரசன், வாதவூரருக்குப் பரிசுகள் கொடுத்தனுப்பினான். பிறகு அரசனுடைய வேலைக்காரர்கள் குதிரைகளைக் கொண்டுபோய்க் கட்டுத்தறிகளில் கட்டினார்கள்.

அன்று இரவில் இறைவன் திருவிளையாட்டால் குதிரைகள் எல்லாம் முன்போல் நரிகளாக மாறின; கட்டுத்தறியிலிருந்து விடுவித்துக் கொண்டு வீதிதோறும் ஓடின. இதை அறிந்த குதிரை வீரர்கள் அரசனிடம் சென்றுத் தெரிவித்தார்கள். அதுகேட்ட பாண்டியன் சினம் கொண்டு வாதவூரரை வரவழைத்து மாயச்செய்கைகள் செய்ததற்காக அவரைத் தண்டித்து மீண்டும் சிறையிலடைத்தான். ஈசனும் அடியவருக்கு நேர்ந்த தீங்கினைக் கண்டு அவரது துன்பத்தை நீக்கிப்

பாண்டியனுக்கும் பாடம் புகட்டுவதற்காக, வைகை ஆறு பெருகும் படிச் செய்தான்.

ஆற்றுநீர் பெருகுவதைக் கண்ட அரசன், அதற்கு அணை போட்டு நிறுத்துமாறு தன் அமைச்சர்களுக்கு ஆணையிட்டான். அமைச்சர்களும் மதுரை மாநகரின் குடிமக்கள் அனைவரும் வந்து வைகைக் கரையை உயர்த்த வேண்டுமென்று அறிவித்தார்கள். அப்போது பிட்டு விற்கும் தொழிலை மேற்கொண்டு வாழ்க்கை நடத்தும் வந்தி என்னும் பெயருள்ள ஒரு மூதாட்டி தன் பங்கை அடைக்க ஆள் கிடைக்காமல் சிவபெருமானிடம் வேண்டினாள். வந்தியின் வேண்டுதலுக்கு இரங்கிய இறைவன் தானே கூலியாளாக வேடம் தரித்து வந்தான். வந்தியின் பிட்டைத் தனக்குக் கூலியாகக் கேட்டுப் பெற்றுக்கொண்டு அவள் பொருட்டுக் கரையை அடைக்கக் கிளம்பினான்.

கரையை அடைக்க வந்த ஈசன், மண்ணை வெட்டிக் கூடையில் இட்டுக் கூத்தாடி இசைபாடி திருவிளையாடல் புரிந்து கொண்டிருந்தான். அதனால், வந்தியின் கரை மட்டும் அடைபடாமல் இருந்தது. அதனால் கோபம் கொண்ட பாண்டியன் தன் கையில் இருந்த பொற்பிரம்பினால் வந்தியின் கூலியாளாய் வந்த சிவபெருமானுடைய முதுகில் அடித்தான். அப்போது இறைவன் தன் தலைமேல் இருந்த கூடையை கரை உடைப்பில் எறிந்து மறைந்தான். அந்தக் கரை மலைபோல் உயர்ந்தது. அதே கணத்திலேயே, எம்பெருமான் மீது பட்ட அடி எல்லா உயிர்கள் மீதும் பட்டது. தான் அடித்த அடி தன் மீதும் பட்டதைக் கண்டுத் திகைத்திருந்த பாண்டியனுக்கு அவன் செய்த குற்றத்தை உணர்த்தும்படி சிவபெருமான் அசரீரியாக வந்து இவ்வாறு மொழிந்தான் : " பாண்டியனே! நீ கொடுத்தனுப்பிய பொருளை எல்லாம் நமக்காகவே செலவிட்டார் வாதவூரர். நீ பரிகளைத் தரும்படி மாணிக்கவாசகரை வருத்தியதால் தான் நாம் நரிகளைப் பரிகளாக்கி மீண்டும் அவற்றை நரிகளாக்கினோம்; வைகை ஆற்றையும் பெருகச் செய்தோம். இனியாவது மாணிக்கவாசகரின் பெருமையை அறிந்து வாழ்வாயாக".

இறைவன் இவ்வாறு மொழிந்ததும், அரசன் தான் செய்த குற்றத்தை உணர்ந்து மாணிக்கவாசகரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி மன்னிப்புக் கேட்டான். அரசனை மன்னித்து விடைபெற்ற வாதவூர் அடிகள் தவவேடம் தாங்கித் திருப்பெருந்துறைக்கு எழுந்தருளினார்.

திருப்பெருந்துறையில் சிலகாலம் இறைப்பணி செய்தருளிய மாணிக்கவாசகர், சிவபெருமான் எழுந்தருளியுள்ள பிற தலங்களையும் வணங்கி வழிபட்டார். பின்னர், சிதம்பரத்தை அடைந்து, சபாபதியை வணங்கிப் பரமனுக்குப் பாமாலைகள் பல சூட்டி வந்தார்.

அச்சமயம் ஈழத்தை ஆண்ட அரசன் சிதம்பரத்தின் பெருமையைப் பற்றிக் கேள்வியுற்றான். அவன் பவுத்த மதத்தைச் சார்ந்தவன். தான் சிதம்பரத்தைப் பற்றி அறிந்துகொண்டதைத் தனது அவையில் உள்ள புத்த குருமார்களிடம் தெரிவித்தான். அவர்களும் சைவர்களோடு வாதம் செய்து புத்தரைத் தவிர வேறு தெய்வமில்லை என்று சாதித்துக் காட்டுவோம் என்று சபதம் மேற்கொண்டு சிதம்பரத்திற்குப் புறப்பட்டனர். ஈழத்து அரசனும் தன் ஊமை மகளுடன் தில்லையை அடைந்தான்.

ஈழ மன்னன் புத்த குருமார்களுடன் சிதம்பரத்தை நோக்கி வருவதை அப்பகுதியை ஆண்ட சோழ வேந்தன் அறிந்தான். உடனே, சோழன் மாணிக்கவாசகரை அழைத்து பவுத்தர்களுடன் வாதம் செய்யுமாறு வேண்டினான். மணிவாசகரும் அதற்கு உடன்பட்டு சோழ மன்னனின் அரசவைக்கு எழுந்தருளினார்.

மாணிக்கவாசகர் சாக்கியர்களுடன் வாதம் செய்து அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தக்க விடை அளித்து அதிசயத்தில் அவர்களை வாயடைத்து நிற்கச் செய்தார்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஈழத்து அரசனும், `சுவாமி! பேசக் கூடியவர்களாகிய புத்த குருமார்களை எல்லாம் பேசாமல் இருக்கச் செய்த நீங்கள், வாய் பேச முடியாமல்

இருக்கும் எனது மகளைப் பேசும்படி செய்தால் நாங்கள் அனைவரும் சைவர்களாக மாறுவோம்" என்றான்.

வாதவூரடிகளும், சாக்கியர்கள் கேட்ட வினாக்களுக்கு விரிவான விடை அளிக்குமாறு அப்பெண்ணிடம் கூறினார். அந்தப் பெண்ணும் சிவபெருமானின் திருவருளால் வாய் பேசப்பெற்றதோடு மட்டுமல்லாமல் பவுத்தர்களின் வினாக்களுக்கும் தக்க விடை அளித்தாள். இந்த அற்புத நிகழ்வைக் கண்ணாரக் கண்ட பவுத்தர்களும் ஈழ அரசனோடு திருநீறு தரித்து உருத்திராக்கம் பூண்டு சைவர்கள் ஆனார்கள்.

இவ்வாறு அருள் புரிந்து, மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் எழுந்தருளியிருந்தபோது ஒருநாள் தில்லை எம்பெருமான் வேதியர் உருக்கொண்டு அவர்முன் தோன்றி அவரைத் திருவாசகம் அருளிச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். வாதவூரரும் அதற்கிசைந்து பாடல்களை மொழிய அந்தப் பாடல்களை எல்லாம் அம்பலவாணர் தம் திருக்கரத்தால் ஏட்டில் எழுதிக்கொண்டுச் சென்றான். அவ்வேட்டில் `திருவாதவூரர் சொல்லிய இந்தத் திருவாசகம் பொன்னம்பலத்திலே நடனமாடுகின்ற அழகிய திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்தாகும்' என்றும் எழுதிச் சிற்றம்பலத்தின் வாசற்படியில் வைத்து மறைந்தான். மறுநாள் பூசைசெய்ய வந்தவர்கள் அந்த ஏட்டினையும் அதிலுள்ள பாடல்களையும் ஈசனிட்ட கையெழுத்தையும் பார்த்து அதிசயித்து உடனே மாணிக்கவாசகரை அழைத்து வந்து இதன் பொருளைக் கேட்டார்கள். அவர் `இத்தமிழ் நூலுக்குப் பொருள் இவர் தாம்' என்று அம்பலவாணரைக் காட்டி அவரும் அந்தத் திருச்சபையிலேயே மறைந்தார்.

மாணிக்கவாசகர் இவ்வாறு அம்பலத்தில் மறைந்ததைக் கண்ட அடியார்களும் பிறரும் மனமுருகித் தொழுது அதிசயித்து மகிழ்ந்து நின்றார்கள். வானவர்கள் பூமழை பொழிந்தார்கள்.

மாணிக்கவாசகர் வரலாறு

https://shaivam.org/devotees/manikkavasagar-varalaru/#gsc.tab=0

சிவமயம்திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர் வித்துவான்.
திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள்(பொறுப்பு முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி) எழுதி உதவியது

எழுதரு மறைகள்தேறா இறைவனை எல்லிற் கங்குல்
பொழுதறு காலத்து என்றும் பூசனை விடாது செய்து
தொழுத கை தலை மீது ஏறத் துளும்பு கண்ணீருள் மூழ்கி
அழுது அடி அடைந்த அன்பன் அடியவர்க்கு அடிமை செய்வாம்.

- திருவிளையாடற் புராணம்,

செந்தமிழ் மணமும் சிவமணமும் ஒருங்கே கமழும் திருநாடு தென்பாண்டி வள நாடு, இந்நாட்டை அணிசெய்வது, "புனல்யாறு அன்று இது பூம்புனல்யாறு" எனப் புலவர்களால் போற்றப்படும் வைகை ஆறு ஆகும். இந்நதி வரலாற்றுச் சிறப்பும், புராண இதிகாசச் சிறப்புகளும் உடையது.

திருஅவதாரம்

வைகை ஆற்றங்கரையில் மதுரை மாநகரத்திலிருந்து ஏழு மைல் தொலைவில் திருவாதவூர் என்ற தலம் உள்ளது. இத்தலத்தில் இறைவன் வாதபுரீசுவரர் என்னும் திருநாமத்தோடு எழுந்தருளி உள்ளார். இத்தலம் வாயு பூசித்த காரணத்தால் வாதபுரம் என வழங்கப்பெறுகிறது. இந்நகரில் அமாத்திய அந்தணர் குலத்தில் சிவநெறி பிறழாச் சிந்தையாளராகிய அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் சம்புபாதாசிருதர். அவர் மனைவியாரின் பெயர் சிவஞானவதி என்பதாகும். இறைவன் திருவருளால் இவ்விருவருக்கும் சைவம் தழைக்கவும், வேத சிவாகம நெறிகள் விளங்கவும் திருமகனார் ஒருவர் திரு அவதாரம் செய்தருளினார். தாய்

தந்தையர் மனம் மகிழ்ந்து அம்மகனார்க்கு "திருவாதவூரர்" என்னும் திருப்பெயர் சூட்டினர்.

அமைச்சுரிமை ஏற்றல்

திருவாதவூரர்க்கு வயது ஏற ஏறக் கலைஞானங்களும் நிரம்பின. பதினாறு வயதளவில் வாதவூரர் கலைஞானங்கள் அனைத்தும் கைவரப் பெற்றார். இவரது கல்வித் திறத்தையும் நல்லொழுக்கத்தையும் கண்டு அனைவரும் வியந்தனர். அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த மன்னன் அரிமர்த்தன பாண்டியன் என்பவன் ஆவான். திருவாதவூரரது அறிவுத்திறனைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டியன் அவரைத் தனது அவைக்கு அழைத்து அளவளாவி, அவரது அறிவு நலனைக் கண்டு வியந்து "தென்னவன் பிரமராயன்" என்னும் பட்டம் சூட்டித் தனது முதன் மந்திரியாக அமர்த்திக் கொண்டான். திருவாதவூரரும் இஃது இறைவனுடைய ஆணையென்று எண்ணி அதனை ஏற்றுக்கொண்டு அமைச்சுரிமைத் தொழிலை மிகக் கவனத்தோடு இயற்றி வந்தார். வாதவூரரது அமைச்சியலால் குடிமக்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். வாதவூரரும், அரிமர்த்தன பாண்டியனுக்குக் கண்ணும் கவசமுமாக விளங்கி வந்தார்.

வாதவூரர் தமக்குக் கிடைத்த அமைச்சுரிமைத் தகுதியால் உலக அனுபவ இன்பங்களில் மகிழ்ச்சி அடையவில்லை. உலக வாழ்வும், வாழ்வில் காணும் பெரும் போகமும் நிலையற்றவை என்று அறிந்தமையால், அப்பதவியில் அவர்க்கு உவர்ப்புத் தோன்றியது. "கூத்தினர் தன்மை வேறு கோலம் வேறு ஆகுமாறு போல" இவர் மேற்கொண்டிருந்த அமைச்சுரிமைக்கும், இவருக்கும்

தொடர்பில்லாமல் இருந்தது. ஒரு சிறந்த குருநாதரைத் தேடும் வேட்கை இவருக்கு மிகுந்து வந்தது. பிறவிப் பெரும் பயனை அடைவதற்குரிய வழி என்ன என்பதிலேயே இவருடைய சிந்தனை சுழன்று கொண்டிருந்தது.

குதிரைகள் வாங்கச் செல்லல்

ஒரு நாள் வாதவூரர் அரசவையில் அமைச்சராய் வீற்றிருந்தார். அப்போது அரசனுடைய குதிரைச் சேவகர்கள் வந்து 'அரசே! நமது குதிரைப்படைகள் குறைந்துவிட்டன. வயது முதிர்ந்த குதிரைகளும், நோய் நிறைந்த குதிரைகளுமே இப்போது உள்ளன. சிறந்த குதிரைகள் நம்மிடம் இல்லை. ஆதலின் குதிரைப் படைகளைப் பலப்படுத்தவேண்டும் என்று நினைவுறுத்துவது எங்கள் கடமை' என்று வணங்கித் தெரிவித்துக் கொண்டார்கள். அப்போது அரசவையிலிருந்த சில தூதர்கள் கீழைக் கடற்கரையில் நல்ல குதிரைகள் வந்து இறங்கியிருக்கின்ற செய்தியை அரசனிடத்துத் தெரிவித்தார்கள். அரசன் அமைச்சர் பெருமானாகிய வாதவூரரைப் பார்த்து " நம்முடைய கருவூலத்திலிருந்து வேண்டும் பொருள்களைப் பணியாளர் மூலம் எடுத்துச் சென்று நல்ல குதிரைகளை வாங்கி வருக" என்று ஆணையிட்டான்.

வாதவூரரும் அக்கட்டளையை ஏற்றுப் பொறற்பண்டாரத்தைத் திறந்து அளவிறந்த பொருள்களை ஒட்டகத்தின் மீதேற்றிக் கொண்டு, படைகளும் பரிசனங்களும் தன்னைச் சூழ்ந்துவர மதுரைச் சொக்கேசன் ஆலயத்திற்குச் சென்று வணங்கி மதுரையை

விட்டுப் புறப்பட்டார். பல காதங்களைக் கடந்து திருப்பெருந்துறை என்னும் தலத்தை அடைந்தார். அவ்வூரை அணுக அணுக அவர் மேல் இருந்த ஏதோ ஒரு சுமை குறைந்து வருவது போலத் தோன்றியது. இத்தலமே இறைவன் தன்னை ஆட்கொள்ளும் இடம் போலும் என்ற உணர்வு தோன்றியது.

குரு உபதேசம்

அவ்வேளையில் சிவநாம முழக்கம் எங்கிருந்தோ வருவது அவர் செவிகளுக்கு எட்டியது. அவ்வொலி வரும் திசை நோக்கி வாதவூரரும் விரைந்து சென்றார். ஓரிடத்தில் கல்லால மரம் போன்ற பெரியதொரு குருந்த மரத்தடியில் சீடர்கள் சிலரோடு ஞானமே வடிவாக ஒருவர் எழுந்தருளியிருந்தார். வேத சிவாகமங்களும், புராண இதிகாசச் சமய நூல்களும் ஆகிய பல நூல்களையும் கற்றுத் தெளிந்தவர்கள் போன்று சீடர்கள் பலர் அவர்முன் குழுமி இருந்தனர். அச்சீடர்களின் பாசமாம் பற்றறுக்கும் ஆசானாக அக்குருநாதர் வீற்றிருந்தார். அவரது வலத் திருக்கை சின் முத்திரையைக் காட்டிக் கொண்டிருந்தது. அவரது திருமுகம் ஒளி மண்டிலமாகத் திகழ்ந்தது. அவரது கண்கள் திருவருள் விளக்கத்தைச் செய்து கொண்டிருந்தன. இவ்வாறு வீற்றிருந்த குருநாதரைக் கண்ட வாதவூரர் தாம் பல நாட்களாக விரும்பியிருந்த குருநாதர் இவரே என்று எண்ணினார். காந்தம் கண்ட இரும்புபோல வாதவூரர் மனம் குருநாதர் வசமாயிற்று. இந்நிலையில் விரைந்து அருகில் சென்ற வாதவூரர் அடியற்ற மரம் போல அவரது திருவடியில் வீழ்ந்து பணிந்தார். 'ஐயனே!

எளியேனை ஆட்கொண்டருளுக" என வேண்டி நின்றார்.

வாதவூரரின் பரிபாக நிலையைக் கண்ட குருநாதர் திருக்கண் நோக்கம், பரிசம் முதலிய தீட்சைகள் செய்து திருவடி சூட்டித் திருஐந்தெழுத்தை அவருக்கு உபதேசம் செய்தருளினார். இவ்வாறு தம்மை ஆட்கொண்டருளிய பெருங்கருணைத் திறத்தை வியந்த வாதவூரர் அன்போடு குருநாதருடைய திருவடிகளை மீண்டும் வணங்கி எழுந்து நின்றார். ஞானாசிரியரது திருவருள் நோக்கால், ஞானத்தின் திருவுருவாக வாதவூரர் மாறினார். தமது குருநாதரின் திருவடிகளுக்குத் தம்மை ஆட்கொண்ட கருணையைக் குறித்துச் சொல்மாலைகள் பலவும் சூட்டினார்.

மாணிக்கவாசகர்

ஞானாசிரியர் திருமுன் வாதவூரர் பாடிய தோத்திரங்கள் இனிமையோடும் கேட்போர் மனத்தை உருக்கும் அருள் விளக்கத்தோடும் இருந்த காரணத்தால் ஞானாசிரியர் வாதவூரரை நோக்கி "உனக்கு 'மாணிக்கவாசகன்' என்ற பெயர் தந்தோம்" என்று கூறி அவருக்கு அப்பெயரைத் தீட்சா நாமமாகச் சூட்டினார். அன்று முதல் வாதவூரர் என்ற திருப்பெயருடன் மாணிக்கவாசகர் என்ற பெயரும் அவருக்கு வழங்குவதாயிற்று.

திருப்பெருந்துறைத் திருப்பணி

மாணிக்கவாசகர் குருநாதரை வணங்கி 'என்னை ஆட்கொண்ட போதே என்னுயிரும் உடைமையும் தங்கட்கு உரியவாயின. ஆதலால் அடியேன் கொண்டுவந்த பொருள்கள் அனைத்தையும்

ஏற்றுக்கொண்டு அருளல் வேண்டும்' என்று குறையிரந்தார். குருநாதரும் 'அப்பொருளைக் கொண்டு சிவப்பணி செய்க' என்று அருளாணையிட்டார். அக்கட்டளையின் படியே மாணிக்கவாசகர் அரசன் குதிரை வாங்குவதற்குத் தம்மிடம் அளித்த பொருள்கள் அனைத்தையும் சிவப்பணிகளுக்கே செலவிட்டார். நாட்கள் பல சென்றன. மாணிக்கவாசகர் அருளாரமுதத்தை உண்டு கொண்டே தெருளார் சிவானந்த போகத்துத் திளைத்திருந்தார். அமைச்சரின் வேறுபட்ட நிலையை உடன் வந்தவர்கள் கண்டு மாணிக்கவாசகரிடம் 'குதிரைகொண்டு மதுரை செல்ல வேண்டுமே' என்று தாங்கள் எண்ணி வந்த செயலை நினைவூட்டினர். மாணிக்கவாசகர் அவ்வுரைகளைக் கேளாதவராய் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருப்பதை அறிந்த பணியாளர்கள் மதுரை மாநகருக்குத் திரும்பிச் சென்று பாண்டிய மன்னனிடம் நிகழ்ந்தவற்றைத் தெரிவித்தனர்.

பாண்டிய மன்னன் அழைப்பு

இச் செய்தியை அறிந்த பாண்டிய மன்னன் சினந்து திருமுகம் ஒன்று எழுதி அதை வாதவூரரிடம் சேர்ப்பித்து அவரை அழைத்து வருக என ஆணையிட்டுச் சிலரை ஏவினான். பணியாளரும் திருப்பெருந்துறையை அடைந்து அரசன் அளித்த திருமுகத்தை அமைச்சர் பிரானிடம் கொடுத்து அரசன் கட்டளையை அறிவித்து நின்றனர். அதைக்கேட்ட வாதவூரர் தம் குருநாதரிடம் சென்று நிகழ்ந்ததை விண்ணப்பித்து நின்றார். குருநாதர் புன்முறுவல் பூத்து "அஞ்சற்க, ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று மன்னனிடம் அறிவித்து விலையுயர்ந்த மாணிக்கக் கல்லையும் கையுறையாகக்

கொடுக்க" எனக் கூறி மாணிக்க மணியை அளித்து விடை கொடுத்து அனுப்பினார். வாதவூரரும் குருநாதரைப் பிரிய மனமில்லாதவராய்ப் பிரியா விடைபெற்று மதுரைக்கு எழுந்தருளினார்.

அரசவைக்கு வந்த மாணிக்கவாசகர் இறைவன் அருளிய மாணிக்க மணியை மன்னனிடம் கொடுத்து, 'வருகின்ற ஆவணிமூல நாளில் குதிரைகள் மதுரை வந்தடையும்' என்று கூறினார். அரசனும் சினம் மாறி மனம் மகிழ்ந்து அமைச்சரை அன்போடு வரவேற்று அருகிருத்தி அவரை மகிழ்வித்தான்.

நரிகள் பரிகளாயின

வாதவூரருக்கு தாம் அளித்த வாக்கை நிறைவேற்ற, பெருமான் நரிகளையெல்லாம் குதிரைகளாக மாற்றி, தேவர்கள் குதிரைச் சேவகர்களாகப் புடைசூழ, தான் குதிரைத் தலைவன் போலத் திருக்கோலம் கொண்டு, வேதமாகிய குதிரையில் அமர்ந்து, மதுரையை நோக்கிப் புறப்பட்டான். குதிரைப் படைகள் மதுரை நோக்கி வருவதை ஒற்றர்கள் மூலம் மன்னன் அறிந்தான். அவன் மனம் மகிழ்ந்தது.

பாண்டியன் பரிசு

கடல் அலைகள் போல் வந்த படைகளின் விரைந்த நடையால் எழுந்த புழுதிப் படலம் வானை மறைத்தது. குதிரைக் கூட்டம் மதுரை மாநகரை அடைந்தது. குதிரைத் தலைவனாக வந்த சிவபிரான் பாண்டியன் முன்னிலையில்

குதிரைகள் அனைத்தையும் கொண்டு வந்து நிறுத்தினான். குதிரைகளைப் பல வகை நடைகளில் நடத்திக் காட்டியும், ஆடல்கள் புரியச் செய்தும் பாண்டியனை மகிழ்வுறுத்தினான். பெருமகிழ்ச்சி அடைந்த பாண்டியன் குதிரைத் தலைவனுக்கு ஒரு பட்டாடையைப் பரிசாகக் கொடுத்தான். குதிரைத் தலைவனாக வந்த பெருமான் அப்பரிசைப் புன்னகையோடு தன் செண்டினால் வாங்கினான். தான் அளித்த பரிசை மரியாதைக் குறைவாகக் குதிரைத் தலைவன் பெறுவதைக் கண்ட மன்னன் வெகுண்டான். அருகிலிருந்த வாதவூரர் 'செண்டினால் பரிசு பெறுதல் அவர்கள் நாட்டு வழக்கு' என்று கூறி, மன்னன் சினத்தை மாற்றினார். பின்னர் குதிரை இலக்கணமறிந்த வல்லவர்கள் குதிரைகளையெல்லாம் ஆராய்ந்து, இவைகள் நல்ல நிறமும், நடையும், நல்ல சுழிகளும் பெற்றுள்ளன என்று பாராட்டினர். அரசனும் தானளித்த பொருளைவிடப் பலமடங்கு அதிகமான குதிரைகளைப் பெற்றதாக மகிழ்ந்து அவைகளைப் பந்தியில் சேர்க்குமாறு பணித்தனன். குதிரைத் தலைவன் குதிரைகளையெல்லாம் கயிறுமாறிக் கொடுக்கும்படி தன் உடன் வந்தவர்களிடம் கூறி அரசனிடம் விடைபெற்றுச் சென்றான்.

பரிகள் நரிகளாயின

அன்று இரவு நடுநிசியில் குதிரைகளெல்லாம் நரிகளாக மாறின. பந்தியில் இருந்த பழைய குதிரைகளையும் கொன்று தின்று ஊர்மக்கள் அஞ்சும்படி மூலை முடுக்குகளில் எல்லாம் ஓடி மறைந்தன. காலையில்

குதிரைச் சேவகர்கள் உள்ளம் பதறி, உடல் நடுங்கி, அரசனிடம் வந்து முறையிட்டனர். இச்செய்தியைக் கேட்ட மன்னன் சினம் பொங்கி அமைச்சர்களை அழைத்து வாதவூரர் செய்த வஞ்சனையைக் கூறிப் படைத் தலைவர்களை அழைத்து, வாதவூரரைச் சுடுவெயிலில் நிறுத்தித் தண்டனை அளித்து அவரிடத்தில் கொடுத்த பொருள்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு வருமாறு உத்தரவிட்டான். படைவீரர்கள் இவரை அழைத்துச் சென்று சுடுவெயிலில் நிறுத்தித் தலையிலே கல்லேற்றி ஒறுத்தார்கள். வாதவூரர் இறைவன் திருவருளை நினைந்து எனக்கு இத்தகைய துன்பங்கள் வருதல் முறையாகுமா? என்று கூறி வருந்தி நின்றார்.

வைகையில் வெள்ளம்

வாதவூரருடைய துன்பம் துடைக்க எண்ணிய பெருமான், வைகை ஆற்றில் வெள்ளம் பெருகுமாறு செய்தருளினார். வைகையில் தோன்றிய பெருவெள்ளம் மதுரைநகர் முழுவதும் விரைந்து பரவத் தொடங்கியது. பெரு வெள்ளத்தைக் கண்ட ஊர் மக்கள் ஊழிக்காலமே வந்துவிட்டது என்று அஞ்சி நின்றனர். பாண்டியனும் ஆற்று வெள்ளத்தைத் தணிக்க, பூ, பொன், பட்டு முதலிய அணிகலன்களை ஆற்றில் விட்டு வெள்ளம் தணியுமாறு ஆற்றைப் பணிந்தனன். வெள்ளம் மேலும் பெருகியதே அல்லாமல் சிறிதும் குறையாதது கண்டு அமைச்சர்களோடு கூடி ஆராய்ந்து மதுரை மக்களை எல்லாம் ஒருங்கு கூட்டி ஒவ்வொருவருக்கும் இவ்வளவு பங்கு என்று அளந்து கொடுத்து ஆற்றின் கரையை அடைக்கும்படி ஆணையிட்டான்.

மண் சுமந்தது

அரசன் ஆணையைக் காவலர் ஊர் முழுவதும் முரசறைந்து அறிவித்தனர். அந்நகரில் பிட்டு விற்று வாழ்க்கை நடத்தும் வந்தி என்னும் மூதாட்டி தனக்கு அளவு செய்துவிட்ட ஆற்றின் பங்கை அடைக்க ஆள் கிடைக்காமல் வருந்தினாள். நாள்தோறும் ஆண்டவனிடம் அன்பு செலுத்தி வந்த அவ்வந்தியின் துன்பத்தைத் தவிர்க்க இறைவன் அவளிடம் கூலி ஆள் போலத் தோன்றினான். 'யாரேனும் கூலி கொடுத்து என் வேலை கொள்வார் உண்டோ?' என்று கூவிய வண்ணம் தன்னை வந்தடைந்த அப்பணியாளனைக் கண்ட வந்தி மகிழ்ந்து, 'நீ எனக்குக் கூலியாளாக வரவேண்டும்; அவ்வாறு வந்து என் ஆற்றின் பங்கை அடைத்துத் தருவாயானால் நான் விற்கும் பிட்டைக் கூலியாகத் தருகிறேன்' என்று கூறினாள். அதற்கு இசைந்த அக்கூலியாள் அவள் கொடுத்த பிட்டை வாங்கி உண்டு, தாயே! என் பசி தீர்ந்தது; இனி நீ ஏவிய பணியை நான் செய்து முடிப்பேன் என்று அவள் பங்கை அறிந்து அதை அடைப்பதற்கு முற்பட்டான். வந்தி மேலும் அளித்த பிட்டை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரையை நோக்கிச் சென்றான்.

பாண்டியன் பிரம்படி

வேலையைத் தொடங்கிய அவ் வந்தியின் ஆளாகிய சிவபெருமான் ஒரு சிறிது மண்ணை வெட்டித் தன் திருமுடியில் எடுத்துச் சென்று கரையில் கொட்டிவிட்டுக் களைப்படைந்தவன் போல ஓய்வு எடுத்துக்கொள்வதும்,

வந்தி அளித்த பிட்டை உண்பதும், ஆடுவதும் பாடுவதுமாக இருந்து பொழுது போக்கினான். வேலை செய்து களைத்தவன் போலக் கூடையைத் தலையணையாக வைத்து உறங்கவும் செய்தான். ஆற்றின் கரை அடை பட்டதா என்பதைப் பார்வையிட வந்த மன்னனிடம் காவலர், ஊரில் உள்ளோர் ஒவ்வொருவரும் தத்தம் பங்கை அடைத்து முடித்தனர். பிட்டு விற்கும் வந்தி என்னும் கிழவியின் பங்கு மட்டும் அடைபடாமல் கிடக்கிறது. வந்திக்கு ஆளாய் வந்த ஒருவன் நாங்கள் கண்டித்தும் சரிவரத் தன் பணியைச் செய்யாமல் பொழுதைக் கழிக்கிறான்; அதனால் அப்பகுதி "நூற்றைக் கெடுத்தது குறுணி" என்பது போல, ஒருத்தி பங்கு ஊரார் பங்கையும் கரைக்கிறது என்று கூறினர்.

உடனே அப்பகுதியைப் பார்வையிட வந்த பாண்டியன் அக்கூலியாளை அழைத்து வரச்செய்து தன்னுடைய கைப்பிரம்பால் முதுகில் அடித்தான், அடித்த அளவில் கூலியாளாக வந்த பெருமான் ஒருகூடை மண்ணை உடைப்பில் கொட்டி மறைந்தான். வெள்ளமும் வற்றியது . பாண்டியன் அடித்த அப்பிரம்படி அரசன், அரசி அமைச்சர், காவலாளர்கள் முதலிய எல்லோர் மேலும் பட்டது. அண்ட சராசரப் பொருள் அனைத்தின் மேலும் பட்டது. அதுசமயம், ஓர் அசரீரி வெளிப்பட்டு அரசனும் ஏனையோரும் கேட்டனர் 'எமது அடியான் மாணிக்கவாசகன் பெருமையை உலகறியச் செய்யவே நாம் இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் செய்தோம். அவரைப் போற்றி நீ பெருவாழ்வு வாழ்வாயாக'.

அப்போது வாதவூர் இறைவன் தன் பொருட்டுக் கூலியாளாக வந்த திருவருளை எண்ணி வியந்தார். பாண்டிய மன்னன் வாதவூரர் பெருமையை நன்கறிந்து அவரை வணங்கி, 'நற்றவப் பெரியீர்! எனக்கு அமைச்சராய் அமர்ந்து எம் குல தெய்வத்தை என் கண்ணாரக்காட்டிக் குதிரைச் சேவகனாகவும், கூலியாளாகவும் வரச்செய்து என் பிறவி மாசை ஒழித்த பெரியவரே, என்னை மன்னித்தருளவேண்டும். தங்கள் பெருமையை இறைவன் எனக்கு நன்கு உணர்த்தினான். என் அரசுரிமையை இன்று முதல் தாங்கள் ஏற்றருளல் வேண்டும்' என்று வேண்டினான். வாதவூரர் பாண்டியனிடம் 'இறைவனுடைய திருவடித் தொண்டு செய்ய என்னை உரிமையாக்குவதே இவ்வுலக ஆட்சியை எனக்குத் தருவதற்கு ஒப்பாகும்' என்றார். மன்னனும் அதற்கு இசைந்து அவர் விரும்பியவாறு அவரைச் செல்ல விடுத்துத் திருவருள் உணர்வோடு தம் அரண்மனைக்குச் சென்றான். மாணிக்கவாசகருக்கு திருப்பணி செய்ய வேண்டும் பொருளைப் பண்டாரத்திலிருந்து கொடுக்கவும் ஆணையிட்டான்.

அமைச்சியலைத் துறந்து தவவேடம் தாங்கிய வாதவூரடிகள் இறைவன் திருவிளையாடல்களை எண்ணி மகிழ்ந்தவராய், திருப்பெருந்துறையை அடைந்தார்.

குருநாதர் பிரிவு

மீண்டும் தன் குருநாதரை அடைந்த வாதவூரடிகள் அடியவர் கூட்டத்தோடு கலந்து மகிழ்ந்திருந்தார். ஞான தேசிகனாய் வந்த பெருமான் தாம் கயிலைக்குச் செல்ல

வேண்டியதைச் சீடர்களுக்கு உணர்த்தி அவர்களை இன்புற்றிருக்குமாறு பணித்தார். அடியவர்கள் தம் குருநாதரைப் பிரிய மனம் இல்லாமல் பெரிதும் வருந்தினர். அதைக் கண்ட குருநாதர் இக் குருந்த மரத்தின் நிழலில் ஒரு தெய்வப்பீடம் அமைத்து அதில் நம்முடைய திருவடிகளை எழுப்பி வழிபாடு செய்து வருவீர்களானால் ஒருநாள் 'இக்கோயில் திருக்குளத்தில் தீப்பிழம்பு ஒன்று தோன்றும்; அதில் அனைவரும் மூழ்கி எம்மை அடையலாம்' என்று திருவாய் மலர்ந்து தம்மைப் பின் தொடர்ந்து வந்த அடியார்களை 'நிற்க' எனக் கட்டளையிட்டுக் கயிலை சென்றார். வாதவூரடிகள் மட்டும் அவரைப் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார். அவரைக் கண்ட குருநாதர், 'நீ எம்மைப் பின் தொடர்ந்து வருதல் வேண்டா; உத்தரகோசமங்கை என்னும் திருப்பதிக்குச் சென்று அங்கு எண்வகைச் சித்திகளையும் பெற்று, திருக்கழுக்குன்றம் முதலான தலங்களைத் தரிசித்துப் பின்னர் தில்லையை அடைவாயாக' என்று கூறிச் சென்றார். மாணிக்கவாசகரும் அவ்வாறே திருப்பெருந் துறையில் குருந்த மரத்தின் கீழ் ஒரு தெய்விகப் பீடம் அமைத்து அதில் குருநாதரின் திருவடிகளை எழுந்தருளச் செய்து அடியார்களோடு தாமும் வழிபட்டு வரலாயினர்.

தல யாத்திரை

மாணிக்கவாசகர் திருவருட்போகத்தில் திளைத்து வாழும் நாட்களில் நமச்சிவாய வாழ்க என்று தொடங்கும் சிவபுராணம், அற்புதப் பத்து, அதிசயப் பத்து, குழைத்த பத்து, சென்னிப் பத்து, ஆசைப் பத்து, வாழாப் பத்து,

அடைக்கலப் பத்து, செத்திலாப் பத்து, புணர்ச்சிப் பத்து, அருட்பத்து, திருவார்த்தை, எண்ணப் பதிகம், திருவெண்பா, திருப்பள்ளியெழுச்சி, திருவேசறவு, ஆனந்த மாலை, உயிருண்ணிப் பத்து, பிரார்த்தனைப் பத்து, திருப்பாண்டிப் பதிகம் முதலிய பதிகங்களைத் திருவாய் மலர்ந்தருளி அடியார் கூட்டத்துடன் பலநாள் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருந்தார்.

ஒருநாள் திருக்குளத்தில் தீப்பிழம்பு தோன்றிற்று. அடியார்கள் அனைவரும் ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு அதில் மூழ்கினர். பெருமான் அம்மையப்பராய் இடப வாகனத்தில் எழுந்தருளி அருட்காட்சி வழங்கியருளினான். அடியார்கள் அனைவரும் மூழ்கிச் சிவகணங்கள் ஆயினர். மாணிக்கவாசகர் இவ்வேளையில் கொன்றைமர நிழலில் சிவயோகத்தில் அமர்ந்திருந்தார். இந்நிகழ்ச்சியை யோகக் காட்சியில் அறிந்த அடிகள் அடியார்களின் பிரிவாற்றாது வருந்தி, குருந்த மரத்தினடியில் இருந்த குருநாதரின் திருவடிப் பீடத்தைப் பற்றிக் கொண்டு அழுதார். திருச்சதகம் என்னும் பாமாலையால் இறைவன் திருவருளைத் தோத்தரித்தார். பின்னர் குருநாதர் தனக்குப் பணித்த அருளாணையின் வண்ணம் திருவுத்தரகோசமங்கைக்குச் சென்று நீத்தல் விண்ணப்பம் என்னும் திருப்பதிகத்தால் தோத்திரம் செய்தார்.

அப்போது அத்தலத்தில் இறைவன் திருப்பெருந்துறையில் காட்டிய குருந்தமர் கோலத்தைக் காட்டியருளினான். அத்திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்த அடிகள், அங்கு அட்டமாசித்திகள் கைவரப் பெற்றார். பின்னர் பல திருப்பதிகளையும் வணங்கிக் கொண்டு பாண்டிய நாட்டைக் கடந்து சோழவளநாட்டைச் சேர்ந்த

திருவிடைமருதூரை வந்தடைந்தார். இடைமருதில் ஆனந்தத் தேனாக எழுந்தருளியுள்ள இறைவன் அருள் நலத்தை நுகர்ந்து திருவாரூரை அடைந்து புற்றிடம் கொண்ட பெருமானை வணங்கி, திருப்புலம்பல் என்னும் பதிகத்தை அருளிச் செய்தார். அதன் பின்னர்ச் சீர்காழியை அடைந்து தோணியப்பரைத் தரிசித்து பிடித்த பத்து என்னும் பதிகத்தை அருளிச் செய்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, சோழநாடு கடந்து நடுநாட்டை அடைந்து திருமுதுகுன்றம், திருவெண்ணெய்நல்லூர் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவண்ணாமலையை அடைந்தார். அங்கும் இறைவன் குருந்தமர் திருக்கோலம் காட்டி அருளினன். அக்காட்சியைக் கண்டு வணங்கிய அடிகள் அத்தலத்தில் பல நாட்கள் தங்கியிருந்தார்

திருவண்ணாமலையில்

அடிகள் அண்ணாமலையில் தங்கியிருந்த போது மார்கழி மாதம் வந்தது. திருவாதிரைக்கு முன் பத்து நாட்களில் கன்னிப் பெண்கள் விடியற்காலம் எழுந்து வீடுகள் தோறும் சென்று ஒருவரையொருவர் துயிலெழுப்பிக்கொண்டு நீராடி வழிபாடு செய்வதைக் கண்டு, அவர்கள் வாய் மொழியாகவே வைத்து திருவெம்பாவையையும், அவ்வூர்ப் பெண்கள் அம்மானையாடும் காட்சியைக் கண்டு அவர்கள் பாடுவதாக வைத்து திருவம்மானையையும் அருளிச் செய்தார்

சிதம்பர தரிசனம்

பின்னர் அண்ணாமலையை நீங்கிக் காஞ்சிபுரம் அடைந்து அவ்வூர் இறைவனைத் தரிசித்துத் திருக்கழுக்குன்றம்

அடைந்து திருக்கழுக்குன்றப் பதிகம் பாடினார். அங்கே பெருமான் பெருந்துறையில் அவரை ஆட்கொண்ட குருநாதர் திருக்கோலத்தோடு காட்சி வழங்கினான். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருத்தில்லையின் எல்லையை அடைந்து அத்திருத்தலத்தைத் தரிசித்தார். தில்லை சிவலோகம் போலக் காட்சியளித்தது. அந்நகரை அடைந்த மாணிக்கவாசகர் திருவீதிகளைக் கடந்து கிழக்கு திருவாயில் வழியே திருக்கோவிலுக்குள் சென்றார். சிவகங்கையில் நீராடி வலமாகச் சிற்சபையில் எழுந்தருளியிருக்கும் ஆனந்த நடராசப் பெருமானை ஆரா அன்பினில் கண்டு கண்ணீர் வார உளம் நெகிழ்ந்து வணங்கினார். குருநாதராக எழுந்தருளி வந்து காட்சி கொடுத்த இறைவனைத் தில்லைச் சிற்றம்பலத்திலே கண்டு தரிசித்து பேரானந்தம் உற்று ஆனந்தக் கண்ணீர்பெருக கண்ட பத்து என்னும் பதிகம் பாடி வழிபட்டார்.

பின்னர் தில்லையின் கீழ்த்திசையில் ஒரு தவச்சாலை அமைத்துப் பலநாட்கள் தங்கியிருந்து தினமும் அம்பலவாணனின் ஆனந்த நடனத்தைத் தரிசித்து வந்தார். அங்கிருந்து திருப்புலீச்சரம், திருநாகேச்சரம் முதலான தலங்களுக்குச் சென்று தரிசித்து மீண்டும் தில்லை வந்தடைந்தார். தில்லையில் அடிகள் அருளிச் செய்தவை குலாப்பத்து, கோயில் திருப்பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல், திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருவுந்தியார், திருத்தோள் நோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் அன்னைப் பத்து, திருக்கோத்தும்பி, குயில் பத்து, திருத்தசாங்கம், அச்சப்பத்து, என்பனவாம்.

புத்த மதத்தாரோடு சமய வாதம்

மாணிக்கவாசகர் தில்லையில் வாழ்ந்துவரும் நாட்களில் சிவனடியார் ஒருவர் சிதம்பரத்திலிருந்து ஈழநாட்டிற்குச் சென்றிருந்தார். அவ்வடியார் செம்பொன்னம்பலம், திருவம்பலம் திருச்சிற்றம்பலம் என்ற திருநாமங்களை இடைவிடாது சொல்லிக் கொண்டிருக்கும் இயல்பு உடையவர்.

அவர் ஈழம் சென்றிருந்த காலத்தில் ஈழநாட்டில் பௌத்த சமயம் மேலோங்கியிருந்தது. இவ்வடியாரின் இயல்பைக் கண்ட சிலர் அரசனிடம் சென்று அவரது செய்கைகளை உணர்த்தினர். அரசன் அச்சிவனடியாரைச் சபைக்கு அழைத்து வருமாறு செய்தான். அரசவைக்கு வந்த அடியவர் செம்பொன்னம்பலம், திருவம்பலம், திருச்சிற்றம்பலம் என்று சொல்லிக்கொண்டே தன் இருக்கையில் அமர்ந்தார். அரசன் வியந்து இதன் பொருள் யாது? என்று அவரைக் கேட்டான். அவ்வடியவர் அதன் சிறப்புக்களை எடுத்துரைத்து 'தீயவரும் உள்ளன்போடு இப்பெயரை ஒருமுறை கூறினால் 21,600 தடவை திருவைந்தெழுத்தைக் கூறியதனால் உண்டாகும் பயனை இது தரும்' என்று கூறித் தில்லைப் பெருமானின் சிறப்பை எடுத்துரைத்தார். அங்கு இருந்த புத்தமத ஆசாரியன் சிவனடியார் கூறுவதைக் கேட்டுச் சினந்து 'திரிபிடகம் அருளிய எங்கள் புத்தனைத் தவிர வேறு தெய்வம் உண்டோ ? ஆதலால் நான் தில்லைக்குச் சென்று சைவத்தை வென்று புத்தனே கடவுள் என்று நிலைநாட்டி வருவேன்' என்று சூளுரைத்து எழுந்தான்.

ஈழத்தரசனும் தன் ஊமைப் பெண்ணையும் உடனழைத்துக் கொண்டு புத்தாசாரியனுடன் தில்லைக்குப் புறப்பட்டான்.

தில்லையை அடைந்த புத்தகுரு, அரசன் முதலானோர் திருக்கோவிலை அடைந்து அக்கோவில் மண்டபம் ஒன்றில் அமர்ந்தனர். கோவில் காப்பாளர் அவர்களை அணுகி புறச்சமயத்தார் இங்கு தங்குதல் கூடாது என்று கூறினர். அதைக் கேட்ட புத்தகுரு யாம் உங்கள் சமயத்தை வென்று எங்கள் சமயத்தை இங்கு நிலைநாட்ட வந்துள்ளோம் என்று வாதிற்கு அறைகூவினான். அச்சூளுரை தில்லைவாழ் அந்தணர்களுக்கு எட்டியது . அவர்கள் சோழ மன்னனுக்கு இந்நிகழ்ச்சியை உடன் தெரிவித்தனர். அன்றிரவு தில்லைவாழ் அந்தணர்கள் அனைவரும் புத்தமத குருவை எவ்வாறு வெல்வது என்ற கவலையுடன் தில்லைச்சிற்றம்பலவனை எண்ணி வணங்கித் துயில் கொண்டனர். நடராசப் பெருமான் அவர்கள் கனவில் எழுந்தருளி 'தில்லையின் கீழ்பால் சிவயோகத்தில் அமர்ந்து தவமியற்றி வரும் நம் அடியவனாகிய மாணிக்கவாசகனை அழைத்து வந்து இப்புத்தகுருவோடு வாதிடச் செய்க; அவன் அவர்களை வெல்வான்; கவலற்க' என்று தெரிவித்தார்.

மறு நாள் தாம் கண்ட கனவை ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு இறைவன் திருவருளை வியந்து அரசனிடம் தெரிவித்து மாணிக்கவாசகர் எழுந்தருளி உள்ள தவச்சாலையை அடைந்து மாணிக்கவாசகரிடம் "அடிகளே! நம் சைவ சமயத்தை அழித்து புத்த மதத்தை நிலை நாட்டும்

எண்ணத்துடன் ஈழநாட்டு மன்னனும், புத்தமதகுருவும் வந்துள்ளனர். தாங்கள் வந்து அவர்களை வாதில் வென்று நம் சமயத்தை நிலை நிறுத்தல் வேண்டும்" என்று அழைத்து, தாங்கள் அனைவரும் கண்ட ஒரே மாதிரியான கனவையும் அரசனது விருப்பத்தையும் தெரிவித்தனர்.

ஊமைப்பெண் பேசியது

மாணிக்கவாசகர் அதற்குச் சம்மதித்து, தில்லை மூவாயிரவருடன் திருக்கோவில் சென்று ஆனந்தக் கூத்தனை வணங்கி அவனருள் பெற்று புத்தமதகுரு இருந்த மண்டபத்தை அடைந்தார். தீயவர்களைக் காண்பது தீது என்றெண்ணி அவர்களுக்கெதிரே ஒரு திரையிடச் செய்து தான் மறு பக்கத்தில் அமர்ந்தார். சோழ மன்னனும் மறையோரும், புலவர்களும் அந்த அவையில் கூடியிருந்தனர். சோழன், மாணிக்க வாசகரைப் பணிந்து, 'புத்தர்களை வாதில் வென்று நம் சமயத்தை நிலைபெறச் செய்வது தங்கள் கடமை. தோல்வியுற்ற புத்தர்களை முறை செய்வது என் கடமை' என்று வேண்டிக் கொண்டான்.

பின்னர் மாணிக்கவாசகர் புத்தகுருவை விளித்து 'வந்த காரியம் என்ன?' என்று வாதத்தைத் தொடங்கினார். வாதம் தொடர்ந்து நடைபெற்றது. மாணிக்கவாசகர் எத்துணை உண்மைகளை எடுத்து உரைத்தாலும் அவை புத்தகுருவின் செவிகளில் ஏறவில்லை. மாணிக்கவாசகர் கூறிய வாதத்தை மறுக்கும் வழியின்றி, சிவநிந்தை செய்யத் தொடங்கினான். அதைக் கண்ட மாணிக்க

வாசகர் கலைமகளை வேண்டி சிவநிந்தை செய்யும் நாவில் நீ இருத்தல் பொருந்துமோ? இவர்கள் நாவைவிட்டு அகல்வாயாக; இது இறைவன் ஆணை' என்று கூறினார். அவ்வளவில் புத்தகுருவும், அவருடன் வந்தவர்களும் ஊமைகளாயினர்.

இதைக் கண்டு வியப்புற்ற ஈழமன்னன் மாணிக்க வாசகரை வணங்கி 'அடிகளே என் மகள், பிறவி முதல் ஊமையாக இருக்கின்றாள். அவளைப் பேசும்படிச் செய்தால் நான் தங்களுக்கு அடிமையாவேன்' என்று கூறினான், மாணிக்கவாசகர் அதற்கிசைந்து அப்பெண்ணை அவைக்கு வரவழைத்து அமர்த்தி, 'பெண்ணே! இப்புத்தன் கேட்ட கேள்விகளுக்கு விடை கூறு' என்று கூறினார். அப்பெண்ணும் அனைவரும் வியந்து மகிழும்படி, புத்தகுருவின் வினாக்களை மாணிக்கவாசகர் தாமே அப்பெண்ணிடம் கேட்க அப்பெண் அதற்கு விடையளித்தாள். அந்த வினா-விடைகளே 'திருச்சாழல்' என்ற திருப்பதிகமாக அமைந்தது. ஈழமன்னனும் அதைக்கண்டு மகிழ்ந்து மாணிக்கவாசகர் திருவடிகளிலே விழுந்து வணங்கி சைவம் சார்ந்தான்.

அவையோர் அனைவரும் மாணிக்கவாசகப் பெருமானைப் போற்றித் துதித்தார்கள். ஈழமன்னன் திருநீறும் கண்டிகையும் பூண்டு அடிகளைப் பணிந்து, புத்தகுருவும், மற்றவர்களும் பேசும் திறம்பெற அருள் செய்ய வேண்டும் என்று வேண்டினான். மாணிக்கவாசகர் அவர்கள் மீது திருவருட் பார்வையைச் செலுத்தினார். அவ்வளவில் அனைவரும் ஊமை நீங்கிப் பேசும் திறம் பெற்று மாணிக்கவாசகரை வணங்கித் தாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டனர். புத்தகுருவும்

அவரைச் சூழவந்த அனைவரும் சைவர்களாக மாறினர். மாணிக்கவாசகரும் திருக்கோவிலுக்குள் சென்று சபாநாயகரை வணங்கித் தம் தவச்சாலைக்கு எழுந்தருளினார். இவ்வாறு தவச்சாலையில் தங்கியிருந்த காலத்தில் மாணிக்கவாசகர் திருப்படையாட்சி, திருப்படையெழுச்சி, அச்சோப் பதிகம், யாத்திரைப் பத்து என்ற பதிகங்களைப் பாடியருளினார்.

இறைவன் திருவாசகம் கேட்டு எழுதியது

இவ்வாறு சிதம்பரத்தில் மாணிக்கவாசகர் வாழ்ந்துவரும் நாட்களில், ஒருநாள் அந்தணப் பெருமான் ஒருவர் அவரிடம் வந்து தான் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர் என்றும், சிவபிரான் மாணிக்கவாசகருக்காகச் செய்த அருட்செயல் உலகெங்கும் பரவியுள்ளது என்றும் வியந்து கூறி மாணிக்கவாசகர் பல தலங்களிலும் பாடிய பாடல்களை முறையாகச் சொல்லும்படி கேட்டுக் கொண்டார். மாணிக்கவாசகரும் அந்தணரை அருகில் இருத்தித் தாம் பாடிய திருவாசகப் பாடல்கள் அனைத்தையும் பலநாட்களாகச் சொல்லியருளினார். அந்தணரும் தம் திருக்கரத்தால் அவைகளை எழுதி முடித்து 'பாவைபாடிய தங்கள் திருவாயால் ஒரு கோவை பாடுக' என்று கேட்டுக் கொண்டார். அவ்வேண்டுகோளுக்கு இணங்கிய மாணிக்கவாசகர் இறைவனது திருவடிப் பேற்றை உட்கருத்தாகக் கொண்ட இனிய "கோவையார்" என்று நூலை அருளிச்செய்தார். அந்தணர் பெருமான் அந்த நூலையும் தம் திருக்கரத்தால் எழுதி முடித்தார்.

பின்னர் அந்தணர் வடிவில் வந்த சிவபெருமான் மறைந்தான். அதைக் கண்ட மாணிக்கவாசகர் இப்படித் தன்னை ஆட்கொண்டவர் சிவபிரானே என்பதை அறிந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கித் திருவருளை எண்ணி வழுத்தினார்.

திருவாசக உட்பொருள்

திருவாதவூரரின் திருவாசகத்தையும், திருக்கோவையையும் தம் கையால் எழுதிய இறைவன் அந்நூல்களை உலகறியச் செய்ய வேண்டி, நூலின் முடிவில் 'மாணிக்கவாசகர் சொற்படி திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து' எனத் திருச்சாத்திட்டு தில்லைச் சிற்றம்பலத்தில் பஞ்சாக்கரப் படியில் வைத்திருந்தார். காலையில் கோவிலில் இறைவனைப் பூஜை செய்யவந்த அருச்சகர்கள் பஞ்சாக்கரப் படியில் நூல் ஒன்று இருப்பதைக் கண்டு வியந்து அதை எடுத்து ஆண்டவனால் இது தரப்பட்டதாகும் என்ற அன்புணர்வோடு பிரித்துப் பார்த்துப் படித்தார்கள்.

அந்த ஏடுகளின் முடிவில் "மாணிக்கவாசகர் சொற்படி திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து" என்றிருந்ததைக் கண்டு, உடல் சிலிர்த்து இறைவன் திருவருளைப் பெறுவதற்குரிய நூல்களில் இது தலையானது என்று புகழ்ந்து இந்நூலைப் பாடிய மாணிக்கவாசகரைச் சென்று கண்டு வணங்கினர். திருவாயிற்படியில் இந்நூல் இறைவனால் வைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சியை அவரிடம் தெரிவித்தார்கள். வாதவூரர் அதைக் கேட்டுத் திருவருளை எண்ணி வணங்கினார். முடிவில் அந்தணர்


அனைவரும் இந்நூலின் பொருளைத் தாங்களே விளக்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

அதற்கு மாணிக்கவாசகர் இதன் பொருளைத் தில்லைச் சிற்றம்பலத்தில் வந்து தெரிவிக்கின்றேன் என்று சொல்லி அவர்களோடு சிற்சபைக்கு எழுந்தருளினார். அங்கு வந்து "இந்நூற்பொருள் இச்சபையில் எழுந்தருளி உள்ள ஆனந்தக் கூத்தப்பெருமானே ஆவான்" என்று காட்டி, அச்சபையில் எல்லோரும் காண மறைந்தருளினார். இவ்வற்புத நிகழ்ச்சியைக் கண்ட அனைவரும் வியந்து மகிழ்ந்து தொழுது போற்றினர். நடராஜப் பெருமான் மாணிக்கவாசகருக்கு, தம் திருவடிகளிலே இரண்டறக் கலக்கும் பேரின்பப் பேற்றைத் தந்து அவரை ஆட்கொண்டு அருளினார்.

திருச்சிற்றம்பலம்







மாணிக்கவாசகர் ஜீவசமாதி
ஆத்மநாத சுவாமி
https://www.youtube.com/watch?v=MYezKgjOMjY
[15:32]



Tirupperunturai

https://en.wikipedia.org/wiki/Tirupperunturai

Avudaiyarkoil	
	
Religion	
Affiliation	Hinduism
District	Pudukkottai
Deity	Athmanathar (Shiva)
Location	
Location	India
State	Tamil Nadu
Country	India



Location in Tamil Nadu

Coordinates	10°04′23″N 79°02′24″E
Architecture	
Type	Tamil architecture
Creator	Manikkavacakar, Vikramaditya Chola

Tirupperunthurai (also called the Athmanathaswamy temple) is located in Avudaiyarkoil village, near Aranthangi in the Pudukkottai district of Tamil Nadu. It was built in 10 century to honor Lord Shiva. One of the sacred books of Tamil Saiva Siddhanta, Manikkavasagar's Tiruvasakam, originated from this shrine. Manikkavasagar is said to have converted the king to follow Shiva, and built the temple with money that had been intended for war-horses.

Legend

The temple is supposed to have been built by Manickavasagar. As the prime minister, he was given money by King Varaguna Pandya II for the purpose of buying good horses in Chola Nadu, instead he spent it on building the temple.[4] When Manickavasagar was confronted by the king for the lack of horses or

money, Shiva displayed one of his *thiruvilayadal*, a divine sport, by transforming jackal to horses, which once they were given to the king became jackal again.

Architecture

Athmanathar temple is a testimony to the temple architectural skills of ancient Hindu sculptors and engineers. This temple is specially known for the carvings of 27 Nakshatras or lunar stations. This temple also showcases the ancient Hindu knowledge of the human anatomy. On a closer look of lord Narsimha's idol, one can find that when he puts Hiranyakashipu on his thighs and claws his stomach, two intestines are gouged out indicating the large and small intestines. In modern science, the intestine was directly seen first in 1761 by Giovanni Battista Morgani.So, this Hindu knowledge of intestines astonishes the researchers. Similarly, the clear distinction between the anatomy of a child and an adult is visible in the idol of Lord Kartikeya where baby fat on his belly and chin bump are neatly carved out whereas the veins on Lord Narsimha's feet outline his adulthood, the no-veins on Kartikeya's feet clearly distinguish his childhood.

The temple covers an area of over 10 acres (40,000 m^2) with three enclosures and faces south, constructed so that the setting sun strikes the sanctum even though it is cloistered within three circumambulatory paths. The presiding deity is formless (*Atmanatar*); there is no Śivalingam but only a pedestal (*Āvudayār*) located in the sanctum, hence the name Avudayar Koil.[7] The God faces South in this temple- in Dakshinamurthy or Guru form. His consort is worshipped as Śivayoganāyaki (Yogāmbāl) in iconless form. There is no Nandi bull icon as is conventional in almost all Shiva temples. There is deep spiritual significance in this. Hinduism allows deity worship for the novice. As one's devotion matures, one begins to contemplate the truth of formlessness of the Brahman. The temple has been designed to illustrate this theology. This one of the rarest *Saivite* shrine in whole of India to portray the supreme truth symbolically. Since the soul (*athma*) has no form, the deity is called Athmanathar. There are five lamps in the sanctum indicating the five time scales and 27 lamps indicating the 27 stars.

Tirupperunthurai is also known as Kokozhi, Śivapuram, Ākāśa Kailāsa, Vadavūr, Chaturvedamangalam and Ādi Kailāsa in Sangam literature. It is also known as Atīta Sabhā as it has six

Sabhā-s, namely Kanakasabhā, Chitsabhā, Satsabhā, Ānandasabhā, Ratnasabhā and Devasabhā in comparison to five Sabhas at Chidambaram, each of these halls is named after Shaivite theological terms. These halls have exquisite carvings. It is believed that Manikkavacakar himself built these sabhas, and covered the Sabhas with 21600 plates of copper. Mother Parvathi in the Thillai Mandap in the second prakara granting the Pasupatha weapon to Arjuna as hunter and his wife is very realistic in workmanship. Mother appears with a chain around the neck, bangles in hand and holding a bag each carved in stone. Iron screws are use in some of the *mantapams*, which is unique for that age.

The temple is noted for the zephyr (granite) roof work. The ceiling of the *Kanga sabhai* (golden hall) is a grandeur creation in stone. The ropes, rafters and nails all are made of granite.[9] The bow wielding Muruga, Kali and Siva's *Rudra thandavam* (wild dance) are the finest specimen in sculptural art. The five philosophies representing the Panchakshara the five letters – Na, Ma, Shi, Va, Ya – Nivrtti Kalā, Pratiśta Kalā, Vidya Kalā, Śānthi Kalā and Śāntyātīta Kalā are in sculpture form on the roof of the Panchakshara Mandap.

The composite columns of Virabhadra holding sword and horn are found be additions of the Vijayanayagara kings during the early 16th century. Similar columns of Virabhadra are found in Veerapthara swamy temple at Pasumbalur Village near Perambalur, Adikesava Perumal Temple at Thiruvattaru, Meenakshi Temple at Madurai, Nellaiappar Temple at Tirunelveli, Kasi Viswanathar temple at Tenkasi, Krishnapuram Venkatachalapathy temple, Ramanathaswamy Temple at Rameswaram, Soundararajaperumal temple at Thadikombu, Srivilliputhur Andal temple, Srivaikuntanathan Permual temple at Srivaikuntam, Vaishnava Nambi and Thirukurungudivalli Nachiar temple at Thirukkurungudi.

Many renovations have been carried out, much of the current structure dates to the 15th century CE. The thousand pillared hall has several delicately crafted pillars with depictions of the Oordhwa Tandavam of Shiva, Karaikal Ammaiyar, Dhanurdhara Subramanya, etc.

Administration

As at Chidambaram and Tiruvanaikoil, here Vedic rituals are performed, unlike the Sivachariyar or Adhisaivar temples who follow Agama rituals. In this case the temple is administered by Nambiar Brahmins (not to be confused with Nair Nambiars or Brahmin Namboodaris) – a class of Vaideeka Brahmins said to be descendants of Rowshayadana, a saint who originated from Agni, and were taught the Vedas by Atmanathar Himself. They are said to number three hundred and are also called Munnothioruvar. This Agnivesha is also famous author of a magnificent ancient medical treatise called *Agnivesha Kalpasutra* spanning 77000 verses that discusses medicines and treatment for many types of diseases.

Festival

Among the annual festivals celebrated here are *Tirumanjanam* (during the Tamil month of Aani, mid June - mid July) and *Thiruvadirai* (during the Tamil month of Margazhi mid December - mid January) each lasting ten days,[1] similar to those festivals in the Chidambaram Nataraja Temple. Worship or *pooja* is done six times a day.

திருவாசகத்தைஇயற்றியவரும், மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவருமான தமிழ் புனிதர் மாணிக்கவாசகர், **சிதம்பரம் நடராஜர் கோயிலுடன்** நெருங்கிய தொடர்புடையவர். அங்குதான் அவர் சிவபெருமானுடன் ஐக்கியமானதாகப் புகழ்பெற்றார். இக்கோயில் வளாகத்திற்குள் அவருக்காக ஒரு பிரத்யேக சன்னதி அமைந்துள்ளது. மேலும், கோயிலுடனான அவரது ஆழ்ந்த ஆன்மீகத் தொடர்பைக் குறிக்கும் வகையில், கிழக்கு கோபுரத்தில் ஒரு சிலையும் உள்ளது.

முக்கிய தொடர்புகள் மற்றும் முக்கியத்துவம்

- **சிதம்பரத்தில் இதன் முக்கியத்துவம்:** புராணத்தின்படி, மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் குடியேறிய பிறகு, மாறுவேடத்தில் வந்திருந்த சிவபெருமானான ஒரு முதியவருக்குத் தனது திருவாசகத்தைப் பாடினார். மறுநாள், அந்தப் பாடல்கள் அடங்கிய பனை ஓலைகள்,

சிவபெருமானே கையொப்பமிட்டு, கோயிலின் பஞ்சாக்ஷரப் படிகளில் கண்டெடுக்கப்பட்டன.

- **சன்னதி:** சிதம்பரம் தீட்சிதர்களால் நிர்வகிக்கப்படும் பரந்த நடராஜர் கோயில் வளாகத்திற்குள், நடராஜப் பெருமானைப் போற்றிப் பாடல்களை இயற்றியதில் மாணிக்கவாசகரின் பங்களிப்பைப் போற்றும் வகையில், அவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட புனிதத் தலம் உள்ளது.
- **இருப்பிடம்:** பஞ்ச பூத ஸ்தலத்தின் ஆகாஷ (விண்வெளி) அங்கத்தைக் குறிக்கும் வகையில், தமிழ்நாட்டின் சிதம்பரத்தில் இந்தக் கோயில் அமைந்துள்ளது.

வருகைத் தகவல்

- **நேரம்:** பொதுவாக காலை 6:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரையிலும், மாலை 5:00 மணி முதல் இரவு 10:00 மணி வரையிலும் திறந்திருக்கும்.
- **ஆடை விதிமுறை:** ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் கண்ணியமான, பாரம்பரிய உடை பரிந்துரைக்கப்படுகிறது






சிதம்பரம் நடராசர் கோயில்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%A8%E0%AE%9F%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%95%E0%AF%8B%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D

தேவாரம் பாடல் பெற்ற
சிதம்பரம் தில்லை நடராஜர் திருக்கோயில்





சிதம்பரம் தில்லை நடராஜர் திருக்கோயில்

தில்லை நடராசர் கோயில், சிதம்பரம்

புவியியல் ஆள்கூற்று:	11.399283°N 79.693565°E
பெயர்	
புராண பெயர்(கள்):	தில்லை, பெருமபற்றப் புலியூர், தில்லைவனம்
பெயர்:	சிதம்பரம் தில்லை நடராஜர் திருக்கோயில்
ஆங்கிலம்:	Thillai Nataraja Temple
அமைவிடம்	
ஊர்:	சிதம்பரம்
மாவட்டம்:	கடலூர் மாவட்டம்
மாநிலம்:	தமிழ்நாடு
நாடு:	இந்தியா
கோயில் தகவல்கள்	
மூலவர்:	திருமூலநாதர் (மூலட்டனேஸ்வரர் சபாநாயகர் கூத்தப்பெருமாள் விடங்கர் மேருவிடங்கர் தட்சிணமேருவிடங்கர் ருத்ரர் ஆருத்ரர் பொன்னம்பலகூத்தர் பொன்னார்மேனியர் பொன்னன்

பொன்வண்ணர்
பொன்னுசுவாமி
தில்லைவனநாதர்
தில்லைநாயகர்
தில்லைவாசர்
கனகசபை
கனகசபாபதி
கனகசுந்தரம்
கனகராசர்
கனகரத்னம்
சபாரத்னம்
சபாபதி
சபேசர்
ஸ்ரீசபா (சிற்சபேசர்)
திருச்சபைநாதர்
திருச்சிற்றம்பலநாதர்
சிற்றம்பலம்
அம்பலநாதர்
அம்பலவாணர்
அம்பலத்தரசர்
ஆடலரசர்
ஆடியபாதம்
கொஞ்சிதபாதம்
நடனசிவம்
நடனசபாபதி
நடராசர்
நடராசமூர்த்தி
நடராசசுந்தரம்
மோகன நடராசர்
நடேசர்
நடேசமூர்த்தி
நடேசுவரர்
தாண்டவமூர்த்தி
தாண்டவராயர்
ஆனந்ததாண்டவர்
சிதம்பரநாதர்

	சிதம்பரமூர்த்தி சிதம்பரேசுவரர்)
உற்சவர்:	நடராஜர் (கனகசபைநாதர்)
தாயார்:	உமையாம்பிகை (சிவகாமசுந்தரி)
தல விருட்சம்:	தில்லைமரம்
தீர்த்தம்:	சிவகங்கை, பரமானந்த கூபம், வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகச்சேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, புலிமேடு, குய்ய தீர்த்தம், திருப்பாற்கடல்
பாடல்	
பாடல் வகை:	தேவாரம்
பாடியவர்கள்:	அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர்
கட்டிடக்கலையும் பண்பாடும்	
கட்டடக்கலை வடிவமைப்பு:	தென்னிந்தியக் கட்டடக்கலை
கல்வெட்டுகள்:	உண்டு
வரலாறு	
தொன்மை:	3000-4000 ஆண்டுகளுக்கு முன்
கட்டப்பட்ட நாள்:	அறியவில்லை

நடராசர் கோயில் (*Nataraja Temple, Chidambaram*) அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய சமயக் குரவர் நால்வராலும் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் காவேரி வடகரை சிவத்தலங்கள் சோழ நாடு காவிரி வடகரைத் தலங்களில் ஒன்றாகும். இத்தலம் அனைத்துத் திருமுறைகளிலும் பாடப்பெற்ற தலம் எனும் பெருமையைக் கொண்டது. இத்தலம் **சிதம்பரம் தில்லை நடராஜர் கோயில்** என்றும் **சிதம்பரம் தில்லை கூத்தன் கோயில்** என்றும் **சிதம்பரக் கோயில்** என்றும் அழைக்கப்படுகிறது. இத்தலம் சைவ இலக்கியங்களில் **கோயில்** என்ற பெயராலேயே அழைக்கப்பெறுகிறது. திருமுறைகள் பாடுவதற்கு முன்பும், பின்னும், சிவவழிபாடு செய்வதற்கு முன்பும், பின்னும் சைவர்கள் சொல்லும் **திருச்சிற்றம்பலம்** எனும் சொல் இந்த தலத்தையே குறிக்கும். அத்துடன் *பூலோக கைலாசம்* என்றும் *கைலாயம்* என்றும் அறியப்பெறுகிறது. இத்தலத்தை தரிசனம் செய்தால் முக்தி என்பது சைவர்களின் நம்பிக்கையாகும். இத்தலம் தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்திலுள்ள சிதம்பரம் என்னும் நகரில் அமைந்துள்ளது.

தல வரலாறு

'கோயில்' என்று பொதுவாக வழங்கினாலே சைவத்தில் சிதம்பரம் நடராசப் பெருமானின் கோயிலைத்தான் குறிக்கும். ஊர்ப்பெயர் தில்லை; கோயிலின் பெயர் சிதம்பரம், இன்று ஊர்ப்பெயர் வழக்கில் மறைந்து, கோயிலின் பெயரே ஊர்ப் பெயராக வழங்கி வருகிறது.

தில்லை மரங்கள் அடர்ந்த காடாக இருந்தமையால் தில்லைவனம் என்று பெயர் பெற்றது. (இம்மரங்கள் தற்போது சிதம்பரத்தில் இல்லை; ஆனால் இதற்கு அண்மையிலுள்ள பிச்சாவரத்திற்குப் பக்கத்தில் உப்பங்கழியின் கரைகளில் காணப்படுகின்றன.)

இக்கோயிலுள் 'திருமூலட்டானம்' என்னும் தனிக்கோயில் ஒன்றுள்ளது. அர்த்தசாம வழிபாடு முடிந்தபின் எல்லாக்

கோயில்களிலும் உள்ள சிவகலைகள் அனைத்தும் இந்த மூலத்தான லிங்கத்தில் ஒடுங்குவதாக ஐதீகம்.

சிற்றம்பலம் உள்ளே செல்வதற்கு ஐந்துபடிகள் - பஞ்சாக்கரப்படிகள் உள்ளன; இப்படிகளின் இரு புறமும் யானை உருவங்கள் உள்ளன. பதினான்கு சாஸ்திரங்களில் ஒன்றை இப்படியில் வைத்தபோது, இப்படிகளிலுள்ள யானைகளில் ஒன்று தன் தும்பிக்கையால் அந்நூலையெடுத்து நடராசப்பெருமான் திருவடியில் வைத்தமையால் அந்நூல் 'திருக்களிற்றுப்படியார்' என்ற பெயர் பெற்றது.

இத்தலத்தில் நடனமாடும் சிவபெருமானை ஆடலரசர், கனகசபைநாதர் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டாலும் நந்தனார் நாயனார் தான் நடனமாடும் நிலையை வைத்தே **நடராசர்** என்ற பெயர் வைத்தார் பின்பு அப்பெயரே அனைவராலும் அழைக்கப்படும் பெயராக மாறியது.

இத்தலத்தின் மூலவர் : திருமூலநாதர், (தூய தமிழில் : பொன்னம்பலநாதர்)
உற்சவர் : நடராசர் (வடமொழியில் : **கனகசபைநாதர்**)
அம்மன்/அம்மை : உமையாம்பிகை, (வட மொழியில் : **சிவகாமசுந்தரி**)
இத்தலத்தின் தலவிருட்சமாக தில்லை மரமும், தீர்த்தமாக சிவகங்கை, பரமானந்த கூபம், வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகச்சேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, புலிமேடு, குய்ய தீர்த்தம், திருப்பாற்கடல் தீர்த்தங்களும் உள்ளன. இத்தலமானது பஞ்சபூதத் தலங்களில் ஒன்றான ஆகாயத் தலமாகும். இத்தலம் திருநீலகண்ட நாயனார் அவதாரத் தலம் எனவும் கூறப்படுகின்றது.

சிதம்பரம் திருமூலராலும், பதஞ்சலி மற்றும் வியாக்கியபாதர் எனும் முனிவர்களாலும் வணங்கப்பட்டுள்ளது. 275 பாடல் பெற்ற சிவத்தலங்களில் முதல் முக்கிய இடம் வகிக்கும் தலம் இதுவே ஆகும். திருவாசகத் திருத்தலங்களில் ஒன்றாகும். அவ்வாறே திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருத்தலங்களில் ஒன்றாகும். இத்தலம் பன்னிரண்டு

திருமுறைகள் அனைத்திலும் பாடப்பட்டுள்ள தலமெனும் பெருமையைக் கொண்டதாகும்.

கோயிலின் வரலாறு

இக்கோயில் சோழர், பல்லவர், விஜய நகர அரசுகளாலே புனரமைக்கப்பட்டு வந்துள்ளதோடு, இவ்வரசுகளிடமிருந்து இக்கோயிலுக்கு மானியங்களும் வழங்கப்பட்டுள்ளன.

சொல்லிலக்கணம்

தில்லை - தில்லை மரங்கள் இருந்த காட்டுப் பகுதி.

கோயில் - கோ என்றால் அரசன் அல்லது கடவுள். இல் என்றால் இருப்பிடம். இதுவே சிவபெருமானின் இருப்பிடம் என்பதைக் குறிக்கும் விதமாக சைவர்கள் இத்தலத்தை கோயில் என்றே அழைத்தனர்.

பெரும்பற்றப்புலியூர்

புலிக்கால் முனிவர்

சிதம்பரத்துக்குப் பெரும்பற்றப்புலியூர் என்று பெயர். புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் பூஜை செய்ததால் அதற்குப் புலியூர் என்று பெயர். அந்தக் கோயிலுக்குச் சிதம்பரம் என்று பெயர். “சித்தம் - இதயம்”, “அம்பரம் - ஆகாசம்”. சித்தம் + அம்பரம் - சிதம்பரம். என்ற பெயரே காலப்போக்கில் அந்த ஊர் பெயர் மறைந்து கோயில் பெயரே ஊரின் பெயராக சிதம்பரம் என்று மாறிவிட்டது.[5] மேலும் சித்தம்பரம் கோயில் ஆனது இதயஸ்தலமாக இவ்வுலகிற்கே இவ்விடத்தில் இருந்து விளங்குவதாகவும் கருதப்படுகிறது.

பற்றுப்புலி

தல புராணங்களில் காலத்தால் முந்தியது கோயிற்புராணம். இது சிதம்பரம் கோயில் பற்றிய பழஞ்செய்திகளைக் கூறுகிறது. 16 ஆம் நூற்றாண்டில் தோன்றிய உரை ஒன்று இதற்கு உண்டு. எழுதியது யார் எனத் தெரியவில்லை. இந்த உரையில் சொல்ல ப்படும் சில விளக்கங்கள்.

ஆன்மாக்களுடைய பற்று இரண்டு. ஒன்று பிறவியில் வந்த உட்பற்று.மற்றொன்று புறப்பற்று. இரண்டும் பெரும்பற்று. இந்தப் பற்றுகள் புலி.

பற்றாகிய புலியைக் கொன்று சிவன் ஆடையாக உடுத்திக்கொண்டான்.

அதனால் இது பெரும்பற்றப் புலியூர்.இங்கு இருக்கும் சபை ஞானசபை.

இதன்படி பற்று + புலி = பற்றப்புலி என வரும்.

திருச்சிற்றம்பலம்

சிறு + அம்பலம் = சிற்றம்பலம். அம்பலம் என்றால் மேடை, இடம், பலர் கூடும் இடம் என்றுப் பொருள். இந்த அம்பலத்தின் மீது இறைவன் திருக்கூத்தாடாவதால் இது திருச்சிற்றம்பலம் என்று அழைக்கப்படுகிறது. இப்பெயரே பின்னாளில் சித்தம்பலம் என்று மருவி பின்னர் சித்தம்பரம் என்றாகி பின்னர் சிதம்பரம் என்றுச் சிதைந்துள்ளது.

பொன்னம்பலம்

இங்கு நடராஜர் ஆடும் சிற்றம்பலத்துக்கு மற்றொரு பெயரே பொன்னம்பலமாகும் இது கனகசபை என்றும் அழைக்கப்படுகிறது. இந்த சபைக்கு, முதலாம் பராந்தகன் சோழ மன்னன் பொற்கூரை வேய்தான் என்றுத் திருவாலங்காட்டு செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. அதனால் இந்தச் சபை **பொன்னம்பலம்** என அழைக்கப்படுகிறது; வடமொழியில் **கனகசபை** எனக் கூறப்படுகிறது.

பேரம்பலம்

"பேரம்பலம்" இது தேவசபை எனப்படும். மணவில் கூத்தனான காளிங்கராயன் விக்கிரமசோழன் காலதில் இச்சபையைச் செம்பினால் வேய்ந்தான் என்று தில்லைக்கோயில் பாடலால் அறிவதோடு, பின்பு இப்பேரம்பலத்திற்கு பொன் வேய்ந்தவன் மூன்றாங்குலோத்துங்கச் சோழன் ஆவான்.

நிருத்த சபை

"நிருத்த சபை" ஊர்த்தவ தாண்டவம் செய்தருளிய இடம்.


இராச சபை

"இராச சபை" இஃது ஆயிரக்கால் மண்டபமாகும். சோழ மன்னர் மரபில் முடிசூடப் பெறுபவர்களுக்கு இம்மண்டபத்தில் முடிசூட்டு விழா நடைபெற்று வந்தன.

ஆனந்த தாண்டவம்

- **ஆடல் கடவுள்** என்று அழைக்கப்படும் நடராஜர் ஒரே இடத்தில் இல்லாமல் ஆடிக்கொண்டே இருக்கிறார்.
- 1) வலது புற மேல் கையில் உடுக்கையை கொண்டிருப்பது இந்த உலகம் ஒலியின் மூலம் துவங்கியது என்பதைக் குறிப்பதாக நம்பப்படுகிறது. இன்றைய அறிவியல் அறிஞர்கள் இதை தான் *பெரு வெடிப்புக் கொள்கை* (BIG BANG THEORY) என்று அழைக்கின்றனர்.
- 2) இடது புற மேல் கையில் உள்ள நெருப்பு எந்நேரமும் அழித்து விடுவேன் என்ற எச்சரிக்கையை கொடுக்கின்றது.
- 3) வலது புற கீழ் கையில் காப்பாற்றுவதை குறிப்பதை போன்று, பயப்படாதே நான் இருக்கிறேன் என்று கூறுகின்றது.
- 4) இடது புற கீழ் கையால், உயர்த்தி இருக்கும் காலைக் காட்டி, தன்னிடம் அடைக்கலம் புகுவோருக்கும், தன்னை வணங்கும் பக்தர்களுக்கான இடம் என்பதை உணர்த்துகிறது.
- 5) இந்த நடனத்தில் ஆக்கல், அழித்தல், காத்தல் என்ற அணுவின் இயற்பியல் விதியின் அனைத்து செயல்களோடும் ஒத்துப்போகின்றது. ஜெனிவாவில் உள்ள உலகின் மிகப்பெரிய அணு ஆராய்ச்சி அமைப்பான செர்ன் (CERN) என்ற இடத்தில் இந்த நடராஜர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

கோயில் அமைப்பு



நடராசர்

வடிவமைப்பு

மனிதரின் உடம்பும் கோயில் என்பதனை விளக்கும் வகையில் சிதம்பரம் நடராசர் கோயில் அமைந்துள்ளது. மனித உடலானது அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து சுற்றுக்களைக் (கோசங்கள் என்னும் Layers) கொண்டது. அதற்கு ஈடாக சிதம்பரம் நடராசர் கோவிலில் ஐந்து திருச்சுற்றுகள் என்னும் பிரகாரங்கள் உள்ளன. மனிதருக்கு இதயம் இடப்புறம் அமைந்திருக்கிறது. அதேபோல அக்கோயிலில் மூலவர் இருக்கும் கருவறை கோயிலின் நடுப்புள்ளியில் இல்லை. இடதுபுறமாகச் சற்று நகர்ந்து இருக்கிறது. ஒரு மனிதர் ஒரு நாளைக்கு 21,600 முறை நுரையீரல் உதவியால் மூச்சுவிடுகிறார். கோயிலின் இதயம்போல அமைந்திருக்கும் கருவறையின் மீதுள்ள கூரை 21600 ஓடுகளால் வேயப்பட்டு இருக்கிறது. மனிதருக்குள் 72000 நாடிகள் ஓடுகின்றன. அதேபோல அக்கூரையில் 72000 ஆணிகள் அறையப்பட்டு உள்ளன. இதயத்தின் துடிப்பே நடராசரின் நடனமாக உருவகிக்கப்பட்டு இருக்கிறது.[8]

கோபுரங்கள்

இக்கோவிலில் நான்கு ராஜகோபுரங்கள் உள்ளன. இவை ஏழு நிலைகளைக் கொண்டவையாகும். கோபுரத்தின் அடிப்பகுதி 90 அடி நீளமும், 60 அடி அகலமும் கொண்டதாகவும், 135 அடி உயரம் உடையதாகவும் அமைந்துள்ளது. இக்கோபுரத்தின் வாசல் 40 அடி உயரம் உடையவையாகும்.

இக்கோவிலின் கிழக்கு கோபுரத்தில் சிவதாண்டவங்களுக்குகாணச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

கோபுரங்கள் மண்டபங்கள்

சிதம்பரம் நடராஜர் கோவிலின் இராஜ கோபுரம் விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. கலைநயமிக்க சிற்பங்கள் நிறைந்த ஆயிரங்கால் மண்டபம் விஜயநகர பேரரசின் தஞ்சை நாயக்க மன்னர்கள் அமைத்தார்கள்.

சந்நிதிகள்

விநாயகர் சந்நிதிகள்

முக்குறுணி விநாயகர், திருமுறை காட்டிய விநாயகர், பொல்லாப் பிள்ளையார், வல்லப கணபதி, மோகன கணபதி, கற்பக விநாயகர், நர்த்தன விநாயகர், திருமூல விநாயகர் என பல்வேறு விநாயகர் சந்நிதிகள் இக் கோயிலில் அமைந்துள்ளன.

சிதம்பரம் கோவிலுக்குள் திருமுறைகள் இருப்பதை இங்குள்ள பொல்லாப் பிள்ளையாரே கூறினார் என தொன்மமொன்று உள்ளது.

நவகிரக சந்நிதிகள்

பதஞ்சலி சன்னதி -

கம்பத்து இளையனார் சந்நதி -

கோவில்கள்

சிதம்பரம் நடராசர் கோவிலில், கோவிலுக்குள் பல்வேறு கோயில்கள் அமைந்திருக்கின்றன.

சிவகாமசுந்தரி அம்மன் கோவில் - மூன்றாவது பிரகாரத்தில் வடக்குப் பகுதியில் சிவகாமசுந்தரி அம்மன் கோவில் அமைந்துள்ளது. இந்த சன்னதி அருகே யமன் மற்றும் சித்திரகுப்தனுக்கு சிலைகள் அமைந்துள்ளன.

கோவிந்தராஜபெருமாள் கோவில் - நடராசன் சந்நிதிக்கு நேரெதிரே அமைந்துள்ளது

பாண்டிய நாயகர் கோவில் - சிவகாம சுந்தரி கோவிலின் வடக்கே, பாண்டிய நாயகர் கோவில் அமைந்துள்ளது. இது

முருகன் கோவிலாகும். இக்கோவிலில் ஆறுமுகம் கொண்ட முருகன், வள்ளி மற்றும் தேவசேனாவுடன் உள்ளார்.

நவலிங்க கோவில் - நவகிரகங்களால் வழிபடப்பட்ட இலிங்கங்கள் உள்ள கோவிலாகும்.

சபைகள்

சித்தசபை, கனகசபை, நடனசபை, தேவசபை, ராஜசபை ஆகிய ஐந்து சபைகள் சிதம்பரம் நடராஜர் கோயிலில் அமைந்துள்ளன.[9] பேரம்பலம் என்பது தேவசபை என்றும், நிருத்த சபை என்பது நடனசபை என்றும், கனகசபை என்பது பொன்னம்பலம் எனவும் அறியப்பெறுகிறது.

கனகசபை

பொன்னம்பலத்தில் 28 தூண்கள் உள்ளன, இவை 28 ஆகமங்களையும், சிவனை வழிபடும் 28 வழிகளையும் குறிக்கின்றன, இந்த 28 தூண்களும் 64 + 64 மேற் பலகைகளை கொண்டுள்ளது, இது 64 ஆயகலைகளை குறிக்கின்றது, இதன் குறுக்கில் செல்லும் பல பலகைகள், மனித உடலில் ஓடும் பல ரத்த நாளங்களை குறிக்கின்றது.

பொன்னம்பலம்" சற்று இடது புறமாக அமைக்கப்பட்டுள்ளது, இது நம் உடலில் இதயத்தை குறிப்பதாகும்.இந்த இடத்தை அடைய ஐந்து படிகளை ஏற வேண்டும், இந்த படிகளை "பஞ்சாட்சர படி" என்று அழைக்கப்படுகின்றது, அதாவது "சி,வா,ய,ந,ம" என்ற ஐந்து எழுத்தே அது. "கனகசபை" பிற கோயில்களில் இருப்பதை போன்று நேரான வழியாக இல்லாமல் பக்கவாட்டில் வருகின்றது. இந்த கனக சபை தாங்க 4 தூண்கள் உள்ளன. இது 4 வேதங்களை குறிக்கின்றது.

தீர்த்தங்கள்

கோயிலில் சிவகங்கை, பரமானந்த கூபம், வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகச்சேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, புலிமேடு, குய்ய தீர்த்தம், திருப்பாற்கடல் ஆகிய தீர்த்தங்கள் அமைந்துள்ளன.

- பரமானந்த கூபம் - நடராசர் கோயிலின் கிழக்கில் அமைந்துள்ளது.
- குய்யதீர்த்தம் - நடராசர் கோயிலின் வடகிழக்கே கிள்ளைக்கு அருகே அமைந்துள்ளது.
- புலிமடு - சிதம்பரம் கோயிலின் தென் பகுதியில் அமைந்துள்ளது.
- வியாக்கிரபாத தீர்த்தம் - நடராசர் கோயிலுக்கு மேற்கில் இளமையாக்கினார் கோயிலிக்கு எதிரே அமைந்துள்ளது.
- அனந்த தீர்த்தம் - நடராசர் கோயிலுக்கு மேற்கிலுள்ள திருவனந்தேச்சுரத்துக்கு கோயிலில் அமைந்துள்ளது.
- நாகச்சேரி - அனந்தேச்சுரத்துக்கு மேற்கில் அமைந்துள்ளது.
- பிரமதீர்த்தம் - நடராசர் கோயிலுக்கு வடமேற்கே இருக்கும் திருக்களாஞ்சேரியில் கோயிலில் அமைந்துள்ளது.
- சிவப்பிரியை - நடராசர் கோயிலுக்கு வடக்கே உள்ள பிரமசாமுண்டி கோயிலின் முன் அமைந்துள்ளது.
- திருப்பாற்கடல் - சிவப்பிரியைக்கு தென்கிழக்கில் அமைந்துள்ளது.

மூலவர் தோற்றம்

மூலவர் திருமூலனாதர் சுயம்பு மூர்த்தியாக அருள்புரிகிறார்.

பொற் கூரையின் மேல் இருக்கும் 9 கலசங்கள், 9 வகையான சக்தியை குறிக்கின்றது.அர்த்த மண்டபத்தில் உள்ள 6 தூண்கள், 6 சாஸ்திரங்களையும்,அர்த்த மண்டபத்தின் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் உள்ள 18 தூண்கள், 18 புராணங்களையும் குறிக்கின்றது

சிதம்பர ரகசியம்

இச்சபையில் சபாநாயகரின் வலது பக்கத்தில் உள்ளது ஒரு சிறிய வாயில், அங்குள்ள திரை அகற்றபட்டு தீபாராதனை காட்டபடும். அங்கு திருவுருவம் இல்லாது, தங்கத்தால் ஆன வில்வ தளமாலை ஒன்று தொங்கவிடபட்டிருக்கும்.இதன் ரகசியம் இங்கு இறைவன் ஆகாய உருவில் இருக்கின்றார்

என்பதுதான்.ஆகாயத்துக்கு ஆரம்பமும் ,முடிவும் கிடையாது ,அதை உணரத்தான் முடியும் என்பதை உணர்த்துவதேயாகும்.

வழிபாடு

உலகில் உள்ள அனைத்து சிவகலைகளும் சிதம்பரம் நடராசர் கோயிலிருந்து காலையில் புறப்பட்டு, இரவில் மீண்டும் கோவிலை வந்தடைகின்றன (இதில் திருவாரூர் தியாகராஜர் சுவாமியயை) தவிர என்று நம்பப்படுகிறது. இதன் காரணமாக மற்ற சிவாலயங்களை விட தாமதமாக இக்கோவிலில் அர்த்த சாம பூசை நடைபெறுகிறது.

இவ்வாறு அனைத்து சிவகலைகளும் சிதம்பரத்தில் ஒடுங்குவதால் பல்வேறு தலங்களுக்கு சென்று வழிபடுவதற்கு சிதம்பரத்தில் நடைபெறும் அர்த்தசாம பூசையில் கலந்து கொள்வது ஈடானதாகக் கருதப்படுகிறது.

ஆறு கால பூசை

சிதம்பரம் நடராசருக்கு தினந்தோறும் ஆறு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆறு கால பூசையென்பது,

1. *காலை சந்தி*
2. *இரண்டாங் காலம்*
3. *உச்சி காலம்*
4. *சாயங் காலம்*
5. *ரகசிய பூசை காலம்*
6. *அர்த்த சாமம்*

ஆண்டுக்கு ஆறு அபிசேகங்கள்

இந்து தொன்மவியல் கணக்கின் படி மனிதர்களது ஓர் ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். ஒரு நாளில் ஆறு கால பூசைகள் நடைபெறுவது போல தேவர்கள் செய்யும் பூசையாக ஆண்டுக்கு ஆறு பூசைகள் சிதம்பரம் கோவிலில் நடைபெறுகின்றன. அவையாவன..

1. *சித்திரை மாதம், திருவோண நட்சத்திரத்தில் கனகசபையில் மாலையில் அபிசேகம்*
2. *ஆனி மாதம், உத்திர நட்சத்திரத்தில் இராச சபையில் அதிகாலையில் அபிசேகம்*

3. ஆவணி மாதம், பூர்வ பட்ச சதுர்த்தசியில் கனக சபையில் மாலையில் அபிசேகம்
4. புராட்டாசி மாதம், பூர்வ பட்ச சதுர்த்தசியில் கனக சபையில் மாலையில் அபிசேகம்
5. மார்கழி மாதம், திருவாதிரை நட்சத்திரத்தில் இராச சபையில் அதிகாலையில் அபிசேகம்
6. மாசி மாதம், பூர்வ பட்ச சதுர்த்தசியில் கனகசபையில் மாலையில் அபிசேகம்

விழாக்கள்

தில்லை அருள்மிகு நடராஜர் கோயிலில் ஆண்டுதோறும் ஆனி மாதம் ஆனி திருமஞ்சனம் தேர்திருவிழாவும், மார்கழி மாதம் மார்கழி ஆருத்ரா தரிசன தேர்திருவிழாவும் என இரு முறை திருவிழாக்கள் மிகச்சிறப்பாக நடைபெறும். இத்திருவிழாக்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு திருத்தேர் வடம் பிடித்து இழுத்து தரிசனம் செய்வார்கள். தில்லை ஸ்ரீ நடராஜர் கோயிலில் மேற்கு கோபுரம் எழுந்தருளியுள்ள குமரக்கோட்டம் அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் கந்த சஷ்டி சூரசம்ஹாரம் பெருவிழா சிறப்பாக நடைபெறும்.

பாடல் பெற்ற தலம்

நால்வர்

சைவப்பெரியோர்களான நாயன்மார்கள் பாடிய தேவாரத்தில் சிதம்பரம் பற்றி கூறப்பட்டுள்ளதாலும், நாயன்மார்கள் நால்வரும் இங்கு வந்து பாடியதாலும் இது பாடல் பெற்ற தலம் என்று அழைக்கப்படுகின்றது. மேலும் பஞ்சபூதங்களில் ஒன்று எனக்கூறப்படும் ஆகாசம் வடிவில், சிவன் இருக்கிறார் என்பதை குறிப்பால் உணர்த்தும் வகையில் சிதம்பர ரகசியம் அமைக்கப்பட்டுள்ளது. இரத்தினத்தால் செய்யப்பட்ட நடராசர் விக்கிரகமும், ஆதிசங்கரர் அளித்த ஸ்படிக லிங்கமும், இன்றும் சிதம்பர ஆலயத்தில் பூஜித்து வரப்படுகிறது.



சிதம்பரம் கோயில்

ஆழ்வார்கள்

வைணவக் கடவுளான திருமால் இங்கு திருச்சித்திரக்கூடம் என்ற சபையில், நடராசரின் கனகசபைக்கு வெகு அண்மையில் இங்கு பிரதிட்டை செய்யப்பட்டுள்ளார். நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் திருச்சித்திரக்கூடம் பற்றி குறிப்பு உள்ளது.

இவ்வாலயத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபம் எனப்படும் ஆயிரம் தூண்கள் கொண்ட மண்டபம், சிற்பக்கலைக்கும், கட்டடக் கலைக்கும் பெயர் பெற்றது. இதை நிபுணர்கள் கட்டடக்கலையின் அற்புதம் என்று புகழ்கின்றனர்.

கலைகள்

நாட்டியம்


சிதம்பரம் நாட்டியாஞ்சலி விழா

நடனக்கலைகளின் தந்தையான சிவபெருமானின் நடனமாடும் தோற்றம் நடனராசன் எனப்படுகிறது. இது மருவி நடராசன் எனவும் அழைக்கப்படுகிறது. சிவபெருமானில் பலவகையான நடனங்களில் இத்தலத்தில் ஆனந்த தாண்டவம் நிகழ்கின்றது. சிதம்பரம் கோவிலில், நாட்டியாஞ்சலி என்ற நாட்டிய விழா ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிறது. இங்கு உலகில் பல்வேறு இடங்களில் நாட்டியம் பயிலும் கலைஞர்கள், தங்களுடைய நாட்டியத்தை அர்ப்பணமாக வழங்குகின்றனர். கலைஞர்கள் இங்கு வந்து நாட்டியார்ப்பணம் செய்வதை ஒரு பெருமையாக கருதுகின்றனர்.

கல்வெட்டுகள்

பக்தி இலக்கியத்திலும், சங்க இலக்கியத்திலும் தில்லை சிவனைப் பற்றி பாடப்பெற்றுள்ளது. சோழ மன்னர்கள் பலர், இந்த ஆலயத்திற்கு பணி புரிந்துள்ளனர், இங்குள்ள ஆலயத்தில் உள்ள கல்வெட்டுகளிலிருந்தும், பொற்கூரையினாலும் நாம் அறிந்துகொள்ள முடியும். சோழர்களுக்குப்பின் பாண்டிய மன்னர்களும், விஜயநகர பேரரசின் கிருஷ்ண தேவராயர் கோவிலின் இராஜ கோபுரம் மற்றும் தஞ்சை நாயக்க

மன்னர்கள் கோயிலின் பிரகாரங்கள் கனகசபை உட்பட ஒன்பது மண்டபங்களை கட்டியதாகவும் பல்வேறு திருப்பணிகள் பலபுரிந்ததாகவும் கல்வெட்டுகளின் மூலம் அறியப்படுகிறது.

நூல்கள்

தமிழகத்திலுள்ள கோவில்களில் அதிகமான நூல்களினாலும், பாடல்களினாலும் போற்றப்படுகின்ற கோவிலாக சிதம்பரம் நடராசர் கோயில் உள்ளது.[10] மேலும் இந்தக் கோவில் 12 திருமுறைகளிலும் பாடல் பெற்ற தலமாகும். திருவாரூர் தியாகராஜர் கோவிலை அடுத்து அதிகப் பாடல்களைக் கொண்ட தலம் இந்தத் தலமாகும். இத்தலத்தினைப் பற்றி நாற்பத்தி நான்கு நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு.

1. தேவாரம் - 11 திருப்பதிகங்கள்
2. திருவாசகம் - 25 திருப்பதிகங்கள்
3. திருக்கோவையார்
4. திருமுறைக் கண்ட புராணம்
5. திருவிசைப்பா
6. திருபல்லாண்டு
7. திருமந்திரம்
8. கோயில் நான்மணிமாலை
9. கோயில் திருப்பண்ணியர் விருத்தம்
10. பெரியபுராணம்
11. சிதம்பரம் மணிக்கோவை
12. சிதம்பரச் செய்யுட் கோவை
13. சிவகாமி அம்மை இரட்டை மணிமாலை
14. தில்லைக்கலம்பகம்
15. தில்லையுலா
16. மூவரு லா
17. தில்லை யமகவந்தாரி
18. சிதம்பரவெண்பா
19. சிதம்பர சபாநாத புராணம்
20. பாண்டிய நாயக முருகன் பிள்ளைத் தமிழ்
21. புலியூர் வெண்பா
22. நடேசர் திருவருட்பா

23. நடராச திருவருட்பா
24. நடராசர் சதகம்
25. நடராசர் திருப்புகழ்
26. சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ்
27. சேக்கிழார் புராணம்
28. சிவகாமியம்மைப் பதிகம்
29. தில்லை கற்பக விநாயகர் வெண்பா அந்தாதி
30. தில்லை நவமணி மாலை
31. சிதம்பர விலாசம்
32. பரமரகசிய மாலை
33. திருவருட்பா
34. தில்லைத் திருவாயிரம்
35. புலியூர் புராணம்
36. சிதம்பரப் புராணம்
37. நடராஜர் காவடிச்சிந்து
38. நடராசர் பத்து
39. நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள்
40. சிதம்பரம் பட்டியல்
41. முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள்
42. சிதம்பரம் சிவகாமியம்மை பஞ்சரத்தினம்
43. தில்லை பாதி நெல்லை பாதி
44. சிதம்பரம் சேஷத்திர மகிமை

கோயில் நிர்வாகம்

தில்லை நடராசர் கோவில் சோழர்களால் நிர்வகிக்கபட்டு வந்தது. பின்னர் விஜயநகர மன்னர்களாலும் தஞ்சை நாயக்க மன்னர்களின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்த நிலையில் தமிழக அரசு பெரும்பாலான கோவில்களை இந்து அறநிலையத்துறையின்கீழ் கொண்டு வந்துள்ளது. தற்போது ஆலயத்தை இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றாலும், அதற்கு முன்பே எம். ஜி. ராமச்சந்திரன் முதல்வராக இருந்தபோதே சிதம்பரம் கோவிலுக்கு நிர்வாக அதிகாரியை நியமிக்க 5–8–1987 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது.[11] தொடர்ந்து பல

ஆண்டுகளாக தீட்சிதர்கள் கட்டுப்பாட்டில் இருந்துவரும் இந்தக் கோயிலில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாக எழுந்த புகார்களின் பின்னணியில் ,2008 பிப்ரவரியில் சிதம்பரம் நடராசர் கோவிலை தமிழக அரசு கையகப்படுத்தியது. இதை எதிர்த்து தீட்சிதர்கள் தொடுத்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. உச்சநீதிமன்றத்தில் தீட்சிதர்கள் மேல்முறையீடு செய்தனர். இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள், நடராசர் கோவிலை தமிழக அரசு ஏற்றது செல்லாது என்றும், தீட்சிதர்கள் நிர்வாகத்தில்தான் கோயில் இருக்க வேண்டும் என்று கூறினர். முறைகேடு குறித்து புகார் வந்தால் அதை சரிசெய்ய கோவில் நிர்வாகத்துக்கு தமிழக அறநிலையத் துறை பரிந்துரைகள் வழங்கலாம் அல்லது புகார்கள் குறித்து விசாரிக்க நடவடிக்கை எடுத்து அதை மேற்பார்வையிடலாம் என்று கூறியுள்ளனர். மேலும் , சிதம்பரம் நடராசர் கோவிலை பொது தீட்சிதர்கள் தான் கட்டினார்கள் என்பதற்கான ஆதாரமும் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை.

குடமுழுக்கு

இக்கோயிலில் 28 ஆண்டுகளுக்குப் பிறகு 1.5.2015 வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெற்றது. யாக சாலையிலிருந்து கடம் புறப்பட்டு காலை 8.00 மணிக்கு சிவகாமசுந்தரி சமேத நடராசர் வீற்றுள்ள சித்சபை, ராஜ்ய சபை எனப்படும் ஆயிரங்கால் மண்டபம் மற்றும் நான்கு ராஜகோபுரங்களுக்கு ஒரே நேரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 8.25 மணிக்கு மகா தீபாராதனை காட்டப்பட்டது. இரவில் தெருவடைச்சான் வீதி உலா சிறப்பாக நடைபெற்றது.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற சிதம்பரம் திருச்சித்ரகூடம் கோவிந்தராஜன் திருக்கோயில்



சிதம்பரம் திருச்சித்ரகூடம் கோவிந்தராஜன் திருக்கோயில்[1]

கோவிந்தராஜ பெருமாள் கோயில், சிதம்பரம், தமிழ்நாடு

புவியியல் ஆள்கூற்று:	11.398848°N 79.693508°E
பெயர்	
புராண பெயர்(கள்):	திருச்சித்ரகூடம்
பெயர்:	சிதம்பரம் திருச்சித்ரகூடம் கோவிந்தராஜன் திருக்கோயில்[1]
அமைவிடம்	
ஊர்:	சிதம்பரம் (சிதம்பரம் நடராசர் கோயில் உள்ளே)
மாவட்டம்:	கடலூர்

மாநிலம்:	தமிழ்நாடு
நாடு:	இந்தியா
கோயில் தகவல்கள்	
மூலவர்:	கோவிந்தராஜர்
உற்சவர்:	தேவாதிதேவன்
தாயார்:	புண்டரீகவல்லி
மங்களாசாசனம்	
பாடல் வகை:	நாலாயிரத் திவ்யப்பிரபந்தம்
மங்களாசாசனம் செய்தவர்கள்:	குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார்
கட்டிடக்கலையும் பண்பாடும்	
விமானம்:	சாத்வீக விமானம்
வரலாறு	
அமைத்தவர்:	சோழர்கள்
தொலைபேசி எண்:	+914144222552, 9894069422

சிதம்பரம் திருச்சித்ரகூடம் கோவிந்தராஜன் கோயில் என்பது 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றாகும். இக்கோயில் சிதம்பரம் நடராசர் கோயிலின் உள்ளே அமைந்துள்ளது.

தல வரலாறு

ஒருமுறை கயிலாயத்தில் சிவனும் பார்வதியும் நடனம் புரிந்தனர். அதில் யார் சிறந்தவர் என பார்வதி ஒரு போட்டி வைத்து தெரிந்து கொள்ளலாம் என அனைத்து தேவர்களையும் அழைத்தாள். அனைவரும் சிவன் வென்றார் என்றனர். உடனே பார்வதி திருமாலை வேண்டினாள். மனம் இறங்கி திருமால் இப்போட்டியில் கலந்து கொண்டார். சிவன் ஊர்த்துவ தாண்டவம் ஆடினார். பார்வதி பெண் என்பதால் அவளால் ஆடமுடியாமல் வெட்கி நின்றாள். அதனால் திருமால் சிவனே இப்போட்டியில் வென்றார் என்றார். இதைக்கேட்ட கோபத்தில் பார்வதி காளியாகி ஓட அவளை தடுக்க சிவன் ஊர் எல்லையில் படுக்க, காளி சிவனின் மார்பில் மிதித்து கோபம் தணித்தாள். கோபம் தணிந்த பார்வதியும், சிவனும் திருமாலை சிவனின் சந்நிதிக்கு எதிரில் குடிகொள்ளுமாறு வேண்டிக்கொண்டனர்.

சன்னதிகள்

இக்கோவிலில் சீதை, இராமர், இலக்குமணன், ஆஞ்சநேயர், புண்டரீகவல்லி தாயார் ஆகியோருக்கு சந்நிதிகள் உள்ளன.









(😊x😊) **மாணிக்கவாசகர்** (😊x😊)

மாணிக்கவாசகர்

பேராசிரியர் முனைவர் ந சுப்புரெட்டியார்

https://archive.org/details/manikkavasagar_201908

1



மாணிக்கவாசகர்


எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.



பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

1916 2016



ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publication





திருவாதவூரர் திருப்பணி செய்விக்கின்றார். பணிகள் விரைவாக நடக்கின்றன.



மாணிக்கவாசகர்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

முக்திநெறியின் அருமையும், பக்திநெறியின் எளிமையும்
வாசகர் வாக்கில் விளங்கும்
வண்ணம் உண்மையை உணர்ந்து
தெளிவு செய்யும் பாங்கினை
மணிவாசகப் பெருமான் வாயிலாக
துய்த்துணரும் நூல் இது

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-938927-6-3

eBOOK ~ *மின் நூல்*

மாணிக்கவாசகர்

அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

மாணிக்கவாசகர்

முதற்பதிப்பு – 1989
இரண்டாம் பதிப்பு - 2018

PRICE: Rs.525.oo

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040


ISBN: 978-81-938927-6-3

9 788193 892763 >

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

— தாயுமான அடிகள்



வணிகர் குலச் செம்மல்

திரு K. இராஜமாணிக்கம் செட்டியார்

சித்தூர்—கட்டமச்சி (ஆ.மா.)

தோற்றம் : 28-3-1919

முத்தி : 14-3-1977

சித்தூர்—கட்டமச்சி (ஆந்திரம்) புகழ் மிக்க வெல்லம் மண்டி அதிபரும் அருட்பிரகாச வள்ளலாரின் திருத் தொண்டரும் முருக பக்தரும் சத்துவக்கும் இன்பம் கண்ட வரும் வணிககுலத் திருச்செல்வருமாகிய **மூத்தர் K. இராச மாணிக்கம் செட்டியார்** அவர்கட்கு

அன்புப்படையல்

கள்ளவிழ் மலர்நேர் திருவருட் பாவிற்
கலைச்சுரும் பாகியின் புற்றோர்,
ஒள்ளிய சித்தூர்ச் சங்கங்குன் றாகி
ஓங்குறத் திருப்பணி புரிந்தோர்;
வள்ளுவர் தங்கப் பதக்கத்து மணிபோல்
வயங்கினோர்; நற்குணச் செம்மல்:
தெள்ளிய புகழ்சால் **இராசமா ணிக்கச்
செட்டியார்க் குரியதிந் நூலே.**

முத்திதரும் வாசகம்

வலமமு உயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல(கு) உவப்ப உகந்தமா ணிக்க
வாசகன் எனும்ஒரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனம்எனும் ஒண்குளம் புகுந்து
நாவெனும் மதகில் நடந்து கேட்போர்
செவியெனும் மடையில் செவ்விதிற் செல்லா
உளம் எனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்திற் சிவமெனும் மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே.[2]

—சிவப்பிரகாச அடி

---

2. நால்வர் நான்மணிமாலை.

ஓம்சக்தி

சிறப்புப்பாயிர மாலை

[புலவர். த. பெரியாண்டவன், எம்.ஏ., உதவிஇயக்குநர்,
தமிழ்வளர்ச்சித் துறை சென்னை-108]

திருநீறு ஒளிரும் நெற்றி
தீந்தமிழ் மணக்கும் செவ்வாய்
திருமால்சீர் பரவும் நெஞ்சம்
சேர்ந்தாரைத் தாங்கும் அன்பு
உருவாகத் தோன்றும் செம்மல்
உயர்சுப்பு ரெட்டி யாராம்
பெருமகன் சீர்மை முற்றும்
பேசுதல் யாரா லாகும்?

சொல்லிலே இனிமை; தூய
நெஞ்சிலே தமிழு ணர்ச்சி;
அல்லுநன் பகலு மெல்லாம்
ஆய்வுகள் செய்தல் மற்றும்
பல்துறை வாயி லாகப்
பைந்தமிழ்த் தொண்டு செய்தல்
வல்லநல் லறிஞர் சால்பு
வையகம் அறிந்த தன்றோ!

ஆங்கில மொழிவ ளப்பம்
அருந்தமிழ் பெறுதல் வேண்டும்
தூங்காமல் அறிஞ ரெல்லாம்
தொண்டுகள் செய்ய வேண்டும்
ஏங்கிடும் தமிழ்த்தாய் ஏக்கம்
ஏகிட வேண்டும் என்னும்
பாங்குளம் வேண்டு மென்பார்
பலசெய்தி சுவையாய்ச் சொல்வார்!

பழங்கதை சொல்லிச் சொல்லிப்
பண்டைநற் பெருமை பேசிப்
பொழுதினை வீணே போக்கும்
புல்லர்போ லிருந்தி டாமல்
அழகுடைத் தமிழ்க்கன் னிக்கு
அணிகல னாகும் நூல்கள்
இழைத்திழைத் திட்டுப் பார்த்து
இன்புறும் மனத்த ராவார்!

கன்னலின் இனிமை தோற்கக்
கற்கண்டுத் தமிழு ரைப்பார்!
முன்னிய ஆழ்வார் பாட்டில்
மூழ்கியே இன்பம் காண்பார்!
தன்னிகர் இல்லா வண்ணம்
தமிழ்ப்பணி நாளும் செய்வார்
மன்னவர் இவர்ப டைத்த
மாநூல்கள் கொஞ்ச மாமோ?

அறிவியல் நூல்கள் தந்தார்
ஆய்வுநூல் பலவும் தந்தார்
நெறியிலக் கியங்கள் தந்தார்
நேர்சமய நூல்கள் தந்தார்
வரலாற்று நூல்கள் தந்தார்
வளப்பாசி ரியநூல் தந்தார்.
உரனேற்று மிவர்நூல் மொத்தம்
ஒரெண்பத் தேழு ஆகும்!

காவியச் சுவையில் தோய்ந்துக்
கலைபல ஆய்ந்தும் கற்றும்
பாவியல் திறங்கள் தேர்ந்தும்
பலநூ ல்கள் கொடுத்த தாலே

வாவியில் கதிரோன் தன்னை
    வரக்கண்ட தாம ரைபோல்
மேவிய தமிழாம் கன்னி
    மேனிபூ ரித்தாள் ஆமாம்!

அந்தநூல் வரிசை தன்னை
    அடுத்ததாய்ப் புகழ்வி ளங்க
வந்தநூல் தான்மா ணிக்க
    வாசகர் என்னு மிந்நூல்
இந்தநூல் தன்னை யானும்
    எழுத்தெண்ணிச் சுவைத்து வேறு
எந்தநூல் இதற்கீ டென்றே
    இன்பத்தில் திளைத்துப் போனேன்!

வேணியங் கொன்றைத் தாரான்
    விரும்பும்நல் லடியா ரான
மாணிக்க வாச கன்சீர்
    மன்பதைக் குரைக்கு மிந்நூல்
ஆணிப்பொன் னொத்த தாக
    அமைந்துள திறங்கள் சொல்ல
வாணிக்கும் கூட யிங்கே
    வார்த்தைகள் போதா தம்மா!

பெருமான்மணி வாச கர்தாம்
    பிறந்தநற் பேறு பெற்ற
திருவாத வூரைப் பற்றித்
    தெரியாதார் வருந்த வேண்டாம்
ஒருமுறை இந்த நூலை
    ஓதுவா ராகில் அன்னார்
திருவாத வூர்க்கே சென்று
    திரும்பிய உணர்வு கொள்வார்!

எத்துணை வருண னைகள்
    எழில்மிகு உவமைத் தேன்கள்
முத்தெனும் விளக்கப் பூக்கள்
    முழுமைசேர் ஒப்பு மைகள்
அத்தனை நயமும் சேர்ந்து
    அமிழ்தமாய் இனிக்கும் நூலை
வித்தகன் சுப்பு வன்றி
    வேறெவர் படைக்கக் கூடும்?

திருவாச கத்தை மற்றும்
    செய்வித்த பெரியோன் தன்னை
ஒருவாச கத்தில் முற்றும்
    உணருதல் வேண்டு மென்னில்
கருவினில் திருப டைத்த
    கலைவலோன் சுப்பு சொன்ன
பெருமைநூல் இஃதே போதும்
    பெரும்பயன் மலைபோல் சேரும்!

வான்புகழ்த் தொண்டு செய்து
    வண்டமிழ் வளர்த்த தாலே
தேன்தமிழ்க் கலைஞர் கையால்
    திரு. வி. க. விருது பெற்ற
கோன்சுப்பு ரெட்டி யாரைக்
    கும்பிட்டு வணங்கு கின்றேன்
நீணில மீதில் அன்னார்
    நீடூழி வாழ்க வென்றே!

சென்னை - 108
2-6-89

—பெரியாண்டன்

அணிந்துரை

[டாக்டர் பொன். சௌரிராசன் பேராசிரியர்—துறைத் தலைவர், திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி]

கவிதை ஓட்டத்தைக் களிற்று நடை, பரிநடை (கஜகதி, துரக கதி) என்றெல்லாம் குறிப்பிட்டு வாய்விட்டுப் படித்து மனக்கண்ணில் கண்டு சுவைஞர்கள் மகிழ்வர். "ஆடு கொடிப் படை சாடி அறத்தவரே ஆள" என்னும் கம்பர்தம் பாடல் பரிநடையில் (துரக கதியில்) அமைந்துள்ளது என்று குறிப்பிட்டு அதற்கேற்ப மொழிநடையில் பாடி இன்புறுவர்.

இவ்வாறு ஒலி நயத்திற்குக் கவிதை உகந்த இந்தக் களிற்றுநடை, பரிநடை முதலியன உரைநடையில் இன்னொரு வகையில் அமைந்து அழகு செய்வதைக் காணலாம்.

பூனைக்கு ஒரு பொந்து போதும்; பூனை நடை பதுங்கு நடை. யானைக்குப் பெரிய தோப்பு வேண்டும்: அது நடையில் நிறைவும் பெருமிதமும் கொண்டு விளங்கும். அப்படித் தான் பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார் அவர்களது நடை எப்பொழுதுமே 'கோலஞ்செய் துங்கக் களிற்றின்' நடையாக அமைதலைக் காணலாம்.

மாணிக்கவாசகர் நூலின் தொடக்கமும் வளர்ச்சியும் இப்படித்தான் பெருமிதத்தோடும் மிகுந்த அநுபவத் துடனும் அமைந்து விளங்குவதைக் காணலாம்.

"மதுரையின் புகழுக்குத் தமிழ்ச்சங்கமும், மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலும்தான் முதற்காரணம் என்பதை நாம் அறிவோம். மீனாட்சி கோயிலின் மிகப் பெரிய வானளாவ நிற்கும் ஒன்பது கோபுரங்களும், அவற்றின்மீது புராணக் கதைகளையெல்லாம் விளக்கும்

பாங்கில் கொத்துக் கொத்தான அழகிய சிற்ப வடிவங்களும், கோயிலுக்கு உள்ளே அமைந்த உறுதியான கற்றூண்களும் அவற்றில் கைபுனைந்தியற்றிய அற்புதமான சிற்ப வடிவங் களும் பண்டைத்தமிழரின் கலைச் சிறப்பையும் நாகரிக முதிர்ச்சியையும் பறைசாற்றிக் கொண்டுள்ளன.'' என்ற பகுதி இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இவருடைய நடையில் தத்துவம் தாண்டவமாடும்; அறிவியல் பல அழகு செய்யும்.

பிறப்பால் பேராசிரியர் ரெட்டியார் சைவர்; வளர்ப்பா லும் சைவர். வாழ்வால் அனைத்தும் கடந்த அனைவரை யும் அன்பால் பிணைக்கும் அருளாளர். ''முக்தி நெறியே அறியாத'' என்னும் மணிவாசகர் பாடலை ஆசிரியர் நெஞ்சம் அசை போடுகின்றது. முக்திநெறி, பக்திநெறி இரண்டும் அவர் சிந்தனையில் இடம்பெறுகின்றன. முக்தி நெறி—இது சரியை, கிரியை யோக, ஞானங்களால் முதிர்ந்த அறிவுடைய பெருமக்கள் மட்டுமே அறிந்து கடைப்பிடித்தற் குரிய அருமையுடையது. பக்திநெறி அப்படி அன்று. பேரன்பின் முதிர்ச்சியே பக்தி. இஃது உலக மக்கள் அனைவரும் அன்பினால் பின்பற்றுதற்குரிய எளிமை வாய்ந்த வழி. முக்திநெறியின் அருமையும், பக்திநெறியின் எளிமையும் வாசகர் வாக்கில் விளங்கும் வண்ணம் உண்மையை உணர்ந்து தெளிவு செய்யும்போதே ஆசிரியரின் நெஞ்சம் ஆழங்கால் பட்டு வைணவ நெறியின் மாட்சியை யும் கண்டு கற்பவர்க்கு நன்கு புலனாக்குகின்றது.

மாணிக்கவாசகர்தம் பிறப்பையும், வளர்ப்பையும் இன்று எழுதுகின்ற ஆசிரியர் என்றோ தாம் சென்று கண்ட திருவாதவூர்ச் சூழலை நெஞ்சில் நிறுத்தி நமக்கும் நினைவூட்டுகின்றார். அந்தப் பகுதியில் தொன்மையியல் கூறுகள் அமைந்து விளங்கக் காணலாம்.

''உழவுத் தொழிலே மக்களின் வாழ்க்கைத் தொழில். இந்த ஊரிலுள்ள ஏரியின் மதகின்மீது உள்ள ஒரு சிலை நம்

மனத்தைக் கவர்கின்றது. இச்சிலை மனித முகமும், சிங்க உடலும் கொண்டது. இதன் சிற்ப அழகே கண்ணைக் கவரும் பான்மையது. இது 'புருஷா மிருகம்' என்ற பெயரால் வழங்குகின்றது. இஃது ஏரி நீரைத் தூய்மையாக்கும் தெய்வம் என்றும், ஊரைக் காக்கும் தெய்வம் என்றும், இதனால் ஆண்டுதோறும் மகாசிவராத்திரியன்று ஒரு திருவிழா நடைபெறுகின்றது என்றும் சிலர் மூலம் கேள்விப்படுகின்றேன். இதன் அருகிலுள்ள பிடாரிக் கோயில் ஊர்ப் பெரு மக்களுக்குப் பத்தியின் இருப்பிடமாகத் திகழ்கின்றது. இத் திருக்கோயிலின் நித்திய கருமங்களில் ஏதேனும் ஒன்று எக் காரணத்தினால் தவறிவிட்டாலும் ஏரி வறண்டு மழை குன்றி வேளாண்மைக்குக் குந்தகமாய் விடும் என்று இன்றும் மக்கள் நம்புகின்றனர்,'' என்பதில் இவற்றைக் காணலாம்.

பேராசிரியர் சுப்புரெட்டியார் பிறவியிலேயே ஓர் ஆராய்ச்சியாளர். எந்தச் செய்தியையும் மேல்மட்டமாகக் கூறி யாரும் அவரிடமிருந்து தப்பமுடியாது. என்ன அது, எப்படியாயிற்று அது, எதற்கு ஆயிற்று அது, யாரால் ஆயிற்று அது, அதனால் விளையும் நன்மை தீமை என்ன என்று இப்படியெல்லாம் துருவித் துருவிக் கேட்பது அவரது இயல்பு. தாம் காணுகின்ற காட்சிகளையும், கற்கின்ற நூல்களையும் அவ்வாறு ஆய்ந்து, ஆய்ந்து உண்மை கண்டு அறிவுறுத்துதலும் இவருக்கு இயல்பு.

'திருத்தில்லையில் அருளிச் செய்த' பகுதியில் இவர்தம் ஆராய்ச்சி ஆழ்ந்தும், அகன்றும் செல்லுதலை நன்கு காணலாம். இப்படித்தான் மணிவாசகம் என்ற தொடர் அமைந்ததற்கு (பக்-26, 27, 28) ஆசிரியர் காட்டும் அகப்புறச் சான்றுகளும் ஆகும்.

இடையிடையே மணிவாசகப் பெருமானுக்கும் தில்லைக் கூத்தனுக்கும் மானசீகமாக நிகழ்ந்த பேச்சினை நேர்முக நடையில் சிறுகதை போக்கில் ஆங்காங்கே ஆசிரியர் தந்து செல்வது பூஞ்சோலையில் நடைபயில்வது போலக் கற்பவர் நெஞ்சம் எளிதில் நூலில் உலவ இடந்தருகின்றது.

'எல்லாப் பொருளும் இதன்பால் உள' எனத் திருவள்ளுவர்தம் திருக்குறளை உலகம் போற்றி உரைக்கும். பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்களும் மண்ணுலகத்திலும்—விண்ணுலகத்திலுமுள்ள எல்லாச் சிந்தனைகளையும் தமிழில் தந்துள்ளார்கள். அவர்தம் சிந்தனைகள் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ'வகை செய்வதோடு விண்ணிலும் ஒரு மச்சுவீடு கட்டிக்கொள்ளத் துணை செய்யவல்லன.

பல்வேறு பொருள்பற்றி பற்பல வகைப்பாடுகளில் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் நூல் பல எழுதினாலும் இறையியல் பற்றிப் பயண நூல் போக்கில் எழுதுகின்ற வகையில் அளவாலும், பொருளாலும் அதிகம் எழுதி இன்று முன்னணியில் இருப்பவர் ஆவர். இந்த வகையில் சாகித்திய அகதெமி இவரை நன்கு நினைவு கூர்தல் வேண்டும்.

மாணிக்கவாசகம் நெஞ்சுருக்கும் நீர்மையது; உண்மைதான். ஆனால், அதில் பொதிந்துள்ள சைவசித்தாந்தச் சிந்தனைகள் அறிந்து கொள்வதற்கு மிக அருமையானவை. மாணிக்கவாசகர் தம் அருள்மொழியும் சித்தாந்தக் கோட்டைக்குள் பயணம் செய்ய நம்மை மிக எளிதாக அழைத்துக் கொண்டு போகின்றார் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள். தொடக்கத்தையே பாருங்களேன்.

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!

என்று மாணிக்கவாசகர் போற்றும் பழம்பதியாகிய பாண்டி நாட்டில் வைகையாற்றங்கரையிலுள்ள திருவாதவூர் என்பது ஒரு சிற்றூர். மதுரைக்குக் கிழக்கே சுமார் 12கல் தொலைவிலுள்ளது; பேருந்து வசதியுண்டு. இன்றளவும் சாலை நன்கு சீர்படவில்லை. 1979ஆம் ஆண்டு மே மாதம் கொடைக்கானலில் 10 நாள் என் மனைவியுடன் தங்கி மதுரைக்கு வந்தேன். மங்கம்மாள் சத்திரத்தில் இடம் கிடைக்காததால் 'காலேஜ் அவுஸ்' என்ற விடுதியில் இருவரும் தங்கினோம்.

வந்த மறுநாள் காலை மாணிக்கவாசகப் பெருமான் அவதரித்த திருத்தலத்தைப் பார்க்கவேண்டும் என்ற அவா எங்கள் மனத்தில் எழுந்தது.''

சேரன் கலம் ஒன்று கடலில் சென்றால் அடுத்து வேறொன்றும் செல்ல இயலாது என்று பண்டைத்தமிழ்ச் சான்றோர் ஒருவர் பாடியுள்ளார். அப்படித்தான் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் ஒருவரைப் பற்றி, ஒரு நூலைப் பற்றி எழுதிவிட்டால் பின் வருபவர் எழுவதற்கு வேறொன்றும் இல்லாது போய்விடும். அவ்வாறு பல நோக்குகளில் நூல் எழுதுதல் இவர்க்கே அமைந்த பாங்கு. பயன்பட்ட நூல்கள், சொல்லடைவுகள் முதலியவற்றை முறையாக அமைத்து எந்நூலாயினும்—படைப்பிலக்கிய மாயினும் ஆராய்ச்சி நூலாயினும்—பதிப்பித்தல் இவருக்குக் கைவந்த கலை.

இந்நூலிலும் அத்தகு பின்னிணைப்புகள் :

1. பயன்பட்ட நூல்கள், 2. பழமொழிகள், 3. புராண வரலாறுகள் 4. மாணிக்கவாசகர் வழிபட்ட தலங்கள் எனப் பல அமைந்து நூலுக்கு ஒரு முழுமை தருதலைக் காணலாம்.

ஆராய்ச்சிக்கும், அகங்குழைந்த பொருள் உணர்வுக்கும் உதவவல்ல இந்த நூல் சைவ அன்பர்களும், தமிழ் ஆய்வாளர்களும், கவிதை ஆர்வலர்களும் படித்துப் பயன் பெறவேண்டிய ஒப்பற்ற நூலாகும். இத்தகைய நூல் பல எழுதித் திருவேங்கடவன் திருவருளால், பல்லாண்டு, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு, பலகோடி நூறாயிரம் வாழவேண்டி அமைகிறேன்.

11, பேராசிரியர் குடியிருப்பு
பிரகாசம் நகர்,
திருப்பதி-517502
16-5-1989

பொன். சௌரிராசன்